வரையறுக்கப்பட்ட இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனம்

வருடாந்த அறிக்கை

2023-2024

# உள்ளடக்கம்


நோக்கு, இலட்சியப் பணி மற்றும் நிறுவனசார் இலக்குகள் .......... 04

இலக்குகள், செயற்பாடுகள், சேவைகள் மற்றும் ஆண்டிற்கான முன்னேற்றம் .......... 05

நிறுவனம் பற்றிய தகவல்கள் .......... 06

தலைவரின் செய்தி .......... 07

இயக்குநரின் அறிக்கை .......... 08

சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் பிரிவுத் தலைவர்கள் .......... 09 - 10

எமது உற்பத்தித் தொகுதி .......... 11 - 13

வர்த்தக மீளாய்வு .......... 14

தொழில் உருவாக்கம் .......... 15

நிறுவன ஆளுகை .......... 16

நிதிசார் சிறப்பம்சங்கள் .......... 17

நிதிசார் சிறப்பம்சங்களின் வரைபடத் தோற்றம் .......... 18 - 19

கூட்டுத்தாபனத்திற்கான பிரிவுகளின் செயலாற்றுகை .......... 20

பிரிவுசார் செயலாற்றுகை ஒப்பீடு .......... 21

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை .......... 22 - 27

விரிவான வருமானக் கூற்று .......... 28

நிதி நிலை பற்றிய அறிக்கை .......... 29

உரிமை முதலின் மாற்றங்கள் பற்றிய கூற்று .......... 30

நிதிப் பாய்ச்சல் கூற்று .......... 31 - 32

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் .......... 33 - 52

# நோக்கு இலட்சியப் பணி மற்றும் நிறுவனசார் இலக்குகள்

## எமது நோக்கு

தேசிய வணிகத் துறையின் முதல்வராக மாறுதல்

## எமது இலட்சியப் பணி

ஆசியாவின் வணிக மையமாக அமைவதற்கும் இலங்கைக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் பங்குதாரர்களின் நலன்களைப் பேணிக்கொண்டு ஏனைய அனைத்துத் துறைகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை அடிப்படையில் அரச துறையின் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக அரச துறைக்குத் தேவையான அனைத்துத் தயாரிப்புகளையும் சேவைகளையும் வழங்குதல்.

## நிறுவனசார் இலக்குகள்

நியாயமான வருவாயை ஈட்டுதல், பணியாளர் மற்றும் தொழில்சார் மேம்பாட்டிற்கு பங்களிப்பு நல்குதல் மற்றும் விசேட வியாபாரச் சின்னங்கள் மூலம் உற்பத்தித் தலைமையை நிறுவுதல்

# இலக்குகள், செயற்பாடுகள், சேவைகள் மற்றும் ஆண்டிற்கான முன்னேற்றம்

## தொழிற்பாட்டு இலக்குகள்

- பல்வகைப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனை மூலம் சந்தையை உறுதிப்படுத்துதல்
- புகழ்பெற்ற மற்றும் நம்பகமான சர்வதேச வியாபாரச் சின்னங்களை நம் நாட்டில் பிரதிநிதித்து-வப்படுத்துதல்
- நிறுவனத்தின் வருவாய் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதன் மூலம் அதன் நற்பெயரை உருவாக்குதல்
- அரசதுறையின் தேவைகளை திறம்பட வழங்குவதன் மூலம் அபிவிருத்தி இலக்குகளை அடைதல்
- நிறுவனத்தின் பிரதான உற்பத்திகளின் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- அரச கொள்கைகள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் மீது தொடர்ச்சியான கவனம் செலுத்துவதன் மூலம் உற்பத்தியை மேம்படுத்துதல்

## தொழிற்பாட்டு மூலோபாயங்கள்

- வாடிக்கையாளர் தளத்தையும் அணுகலையும் விரிவபடுத்துதல்
- வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப தயாரிப்புகளின் தொகுப்பை அதிகரித்தல்
- தொழிற்பாட்டு வளத் திட்டமிடல் முறைமை மற்றும் பெறுகை ஒப்புதல் மூலம் வலைதள இயல வணிக முகாமைத்துவம் மற்றும் தரவு முகாமைத்துவம்
- பிரதான உற்பத்தி வகைகளில் செயலூக்கமான மற்றும் பயனுள்ள பங்கேற்பு

## வருடத்திற்கான முன்னேற்றம்

எமது முக்கிய வணிக வருமானமானது 12,132 மில்லியன் ரூபா மதிப்பைப் பதிவு செய்தது மீளாய்வாண்டில் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் 57 மில்லியன் ரூபாவாகும். வருடத்தில் வரிக்கு முந்திய நிகர லாபம் 1501 மில்லியன் ரூபாவைக் காட்டியதுடன் மொத்தப் உரிமையாண்மை 6,170 மில்லியன் ரூபாவரை குறைவடைந்தது.

2024 மார்ச் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை 300 ஆகும்.

உற்பத்தி நிறுவனங்களுடன் கூட்டாக எங்கள் சொந்த STC வியாபாரச் சின்னத்துடனான உற்பத்திகளை உருவாக்க நாங்கள் திட்டமிட்டுள்ளதோடு மேலும் பல வகையான உற்பத்திகள் திட்டமிடப்பட்டு வருகின்றன.

# நிறுவனம் பற்றிய தகவல்

| | |
|---|---|
| **கம்பெனியின் பெயர் :** | வரையறுக்கப்பட்ட இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாயனம் |
| **சட்ட வடிவம் :** | இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் (STC) ஆனது பாராளுமன்றத்தினால் 1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் வர்த்தக நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது. அது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கீழ் அரச கம்பனிகள் சட்டத்தின் வரையறுக்கப்பட்ட இலங்கை ஜெனரல் ட்ரேடிங் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை ஜெனரல் ட்ரேடிங் கம்பனி எனும் பெயர், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், இலங்கை அரச வர்த்தக பொது கூட்டுத்தாபனம் என 01.10.2010 ஆம் திகதி மாற்றப்பட்டது.<br><br>2023/2024 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்தது. |
| **தலைவர் /முகாமைத்துவ பணிப்பாளர் :** | திரு ஆசிரி வலிசுந்தர : (2022.09.05 இணைதல்) |
| **பணிப்பாளர் சபை :** | திரு.டீ.ஏ. ஹெட்டிஆராச்சி : (2020.01.20 இணைதல்)<br>திருமதி.ஜீ. தஹநாயக்க : (2020.02.05 இணைதல்)<br>திரு.ரீ.ஏ.டீ. ரஞ்சித் : (2022.09.09 இணைதல்)<br>திரு.சி. பீரிஸ் : (2022.11.12 இணைதல்)<br>திரு.கே. ஆர்.எஸ்.பெரேரா : (2023.01.20 இணைதல்)<br>திரு.கே. சத்தியகுமார் : (2022.03.02 இணைதல்) |
| **கம்பனிச் செயலாளர் :** | ஏ.டபிள்யூ. மெனேஜ்மன்ட் கன்சல்டன்ஸ் பிரைவெட் லிமிடெட் |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி :** | கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br>தேசிய கணக்காய்வு அலுவலகம்,<br>இலக்கம் 306/72,<br>பொல்தூவ வீதி,<br>பத்தரமுல்லை. |
| **வங்கியாளர்கள் :** | மக்கள் வங்கி<br>தேசிய வளர்ச்சி வங்கி<br>சம்பந் வங்கி<br>இலங்கை வங்கி |
| **பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :** | 100, நவம் மாவத்தை,<br>கொழும்பு 2,<br>இலங்கை.<br>தொலைபேசி : +94 112 422341-4, +94 112 440880<br>தொலைநகல் : +94 112 447970<br>மின்னஞ்சல் : lankagen@sltnet.lk<br>வலைதளம் : www.stc.lk |
| **கம்பனி பதிவிலக்கம் :** | PB 863 |
| **ஊழியர்களின் எண்ணிக்கை :** | முடிவடைந்த வருடத்தில் கம்பனியினால் 300 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். |

# தலைவரின் செய்தி

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் 2023/2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

## வெளிப்புற சுற்றாடல் கண்ணோட்டம்

இலங்கை 2022 ஆம் ஆண்டு முதல் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டதுடன் எதிர்மறையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியைப் பதிவு செய்தது. எவ்வாறாயினும், இலங்கையின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் மீள்வதற்கான அறிகுறிகளைக் காட்டிய அதேவேளை 2023/2024 ஆம் நிதியாண்டின் ஆரம்பத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எதிர்மறை வளர்ச்சி குறைக்கப்பட்டது. இந்த பொருளாதார மீட்சியானது புதுப்பிக்கப்பட்ட பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை, வட்டி விகிதங்களைக் குறைத்தல் மற்றும் வெளித்துறை அழுத்தத்தை தளர்த்துதல் ஆகியவற்றால் வலுப்பெற்றது.

பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதன் பொருட்டு இலங்கை அரசாங்கத்தை வலுப்படுத்தும் வகையில் பொதுமக்களின் நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்தியும், சிறந்த பொது சேவைகளை வழங்கியும் விவேகமான நிதி முகாமைத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றில் இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் தொடர்ந்து அரசாங்கத்திற்கு ஆதரவளித்தது.

## செயலாற்றுகை மீளாய்வு

அரசாங்கம் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக முயற்சித்துக் கொண்டிருந்த வேளையில், இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் அதன் வரலாற்றில் வரிக்கு முந்தைய மிக உயர்ந்த நிகர இலாபமாக 1.5 பில்லியன் ரூபாவை 2023/2024 ஆம் ஆண்டில் பதிவு செய்தது. 2023/2024 இல் வரிவிதிப்புக்குப் பிந்தைய இலாபம் 963 மில்லியன் ரூபா என்பதுடன் 2022/2023 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் அது 81% வளர்ச்சியாக அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். அதேபோன்று, நிறுவனத்தின் வருடாந்த புரள்வு ரூ.12 பில்லியனை எட்டியதுடன், இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 16% மொத்த இலாப வரம்புடன் 29% அதிகரிப்பை பிரதிபலிக்கிறது. நிரல் அமைச்சு, தலைவர், பணிப்பாளர்கள் சபை மற்றும் STC நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் இந்த வெற்றிக்கு வழிவகுத்தன.

பொருளாதாரத்தின் மாறுபடும் வட்டி விகிதங்களின் நன்மைகளை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம், குறுகிய கால முதலீடுகளில் முதலீட்டை அதிகரிப்பது மற்றும் நிறுவனத்தின் காசுப் பாய்ச்சலை பயனுள்ள வகையில் முகாமை செய்வது போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்துவதன் மூலம் நிகர நிதி வருமானத்தை ரூ.205 மில்லியன் வரை உயர்த்த முடிந்தது.

காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் இருப்புப் பொருட்களை அப்புறப்படுத்தவும், கடன் காலத்தைக் குறைக்கவும், பணப்புழக்கத்தை வலுப்படுத்தவும் ஆதரிக்கப்படும் கடன் கொள்கையை இறுக்கமாக கடைபிடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
2024 மார்ச் 31 ஆம் திகதி நிலவரப்படி, நிறுவனத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்தது.

## சமூகப் பொறுப்புகள்

அரசாங்க கட்டுப்பாட்டு விலை மட்டங்களில் விலைகளை பராமரிப்பதை உறுதி செய்வதன் மூலம் சில்லறை சந்தையில் நுகர்பொருட்களின் விலைகளை நிலைப்படுத்துவதில் அரசாங்கத்தின் பிரதான வர்த்தகப் பிரிவாக STC ஒரு துடிப்பான பங்கினை நிறைவேற்றியுள்ளது. மேலும், பொருளாதார மந்தநிலையின் மத்தியிலும் வாடிக்கையாளர்களின் தேவைகளை அதன் அதிகபட்ச மட்டத்தில் STC தொடர்ச்சியாக பூர்த்தி செய்துள்ளது.

## 2024/2025 ஆம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்

- சந்தை விலைகளை நிலைப்படுத்துவதற்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கும் அரசாங்கத்திற்கு தேவைப்படும்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகம் செய்தல்.
- தற்போதுள்ள உற்பத்தித் தொகுதிக்கு புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மேலதிக விற்பனை வளர்ச்சியை அடைதல்.
- வாடிக்கையாளர் தளத்தை அரசு துறை நிறுவனங்களுக்கும், தனியார் துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம் வருவாயை அதிகரித்தல்.

நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக எனது சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் பணியாட்டொகுதி உறுப்பினர்களிடமிருந்து ஆதரவை எதிர்பார்க்கும் அதே வேளையில், கௌரவ நிதி அமைச்சருக்கும் பணிப்பாளர் சபையின் எனது சக உறுப்பினர்களுக்கும் அவர்களது தொலைநோக்குடன்கூடிய வழிகாட்டல்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். நிதியாண்டு முழுவதும் எங்கள் பயணத்தைப் பகிர்ந்து கொண்ட எங்கள் வங்கியாளர்கள் மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் நன்றி தெரிவிப்பதற்கு இதனை வாய்ப்பாகக் கொள்வதோடு அவர்களின் தொடர்ச்சியான ஆதரவையும் எதிர்பார்க்கின்றேன்.



ஆசிரி வலிசுந்தர
தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர்

# இயக்குநரின் அறிக்கை

**2024 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டிற்கான பணிப்பாளர்களின் அறிக்கை**

வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்களாகிய நாங்கள் 2024 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஐந்தொகை ஆகியவற்றுடன் இந்த அறிக்கையை உறுப்பினர்களுக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**பிரதான செயற்பாடுகள்**

வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனமானது பிரதானமாக அரச துறை நிறுவனங்களின் அலுவலகத் தேவைகளுக்காக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. எங்கள் தயாரிப்புத் தொகுதியில் அலுவலக பொருட்கள் மற்றும் உபகரணங்கள், வீட்டு உபயோக பொருட்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைத்தொடர்பு பாகங்கள், மின்சார மற்றும் மின்னணு பாகங்கள், வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்கள், டயர்கள் மற்றும் வாகன பெட்டரிகள், விவசாய உபகரணங்கள் மற்றும் கருவிகள், உள்ளக வடிவமைப்புகள் மற்றும் அலுவலக தளபாடங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவு வகைகள் உள்ளடங்குவதோடு தீர்வை வரியற்ற தொழிற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக, இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் லிமிடெட், பொருட்களின் விநியோகம் மற்றும் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்காக சில்லறை சந்தையில் அரசாங்கம் தலையிட வேண்டியிருக்கும் போது, பொருட்களின் முக்கிய இறக்குமதியாளர் மற்றும் விநியோகஸ்தராக செயல்படுகிறது. நிறுவனம் அத்தகைய அடிப்படையில் அரிசி மற்றும் முட்டைகளை இறக்குமதி செய்வதில் ஈடுபட்டதோடு அச்செயல்முறையை வெற்றிகரமாகவும் மேற்கொண்டது.

**பணிப்பாளர்கள்**

இந்த அறிக்கையின் தேதியில் பதவியில் இருந்த பணிப்பாளர்கள் ஆண்டறிக்கையில் நிறுவனத் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**நிதிசார் பெறுபேறுகள்**

நிதிசார் பெறுபேறுகள் 2023/2024 ஆம் ஆண்டிற்கான புரள்வு மற்றும் நிகர இலாபம் நேர்மறையான வளர்ச்சியைக் காட்டுகிறது.

| | புரள்வு<br>ரூ. மில்லியன் | மொத்த இலாபம்<br>ரூ. மில்லியன் | வரிக்கு முந்திய நிகர இலாபம்<br>(ரூ. மில்லியன்) |
|---|---|---|---|
| 2023/2024 ஆம் ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகை | 12,132.03 | 1,967.21 | 1,498.93 |

பங்குகள் வெளியீடு - 10 மில்லியன் சாதாரண பங்குகள் ஒவ்வொன்றும் ரூ.10/-

நிறுவனத்தின் மூலதன கட்டமைப்பில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. 2023/2024 காலகட்டத்தில் புதிய பங்குகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

**பங்கிலாபம்**

2023/2024 நிதியாண்டில் இடைக்கால பங்கிலாபம் ரூ.102.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**ஒதுக்கம் மற்றும் நிதி ஏற்பாடுகள்**

2023/2024 நிதியாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள், கணினிகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அதன்மூலம் ரூ. 3,615,021,487 மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் உருவாகியது.

வர்த்தக பங்குகள் மற்றும் கடனாளிகளுக்கு இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் படி நிதிக் கூற்றுக்களுக்கு சேத இழப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, 5 ஆண்டுகளுக்கும் மேலான கடனாளிகளின் தொகைகள் சேத இழப்பு ஏற்பாடுகளாக முழுமையாக வழங்கப்பட்டுள்ளன, மேலும் ஏதேனும் அறவீடு செய்யப்பட்டால், தொடர்புடைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் அதற்கேற்ப சீராக்கல்கள் செய்யப்படும்.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்**

2023/24 ஆம் ஆண்டில் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவராகப் பணியாற்றும் திறைசேரியின் பிரதிநிதி குழுவின் தலைவராகச் செயல்பட்டார். மேலும் 2023/2024 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டு அதனைப் பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர்கள் பின்வருமாறு

| பபணிப்பாளரின் பெயர் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் வகித்த பதவி |
|---|---|
| தலைவர் | திரு. கே.சத்யகுமார் |
| உறுப்பினர் | திரு. துலான் ஹெட்டியாரச்சி |
| உறுப்பினர் | திருமதி. கில்மா தஹநாயக்க |

கணக்காய்வுப் பணியின் விடயப்பரப்பினை உள்ளடக்கிய உள்ளக கணக்காய்வு திட்டம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் அதன் உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட திட்டம் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு முன்னேற்றம் சாராம்சப்படுத்தப்பட்டது.

**பணியாளர்களின் எண்ணிக்கை**

நிதியாண்டின் முடிவில் நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்ததோடு மேல் மட்ட முகாமைத்துவம் 6, மத்திய மட்ட முகாமைத்துவம் 8, கனிஷ்ட முகாமைத்துவம் 16 மற்றும் இதர தரங்களில் 270 என்ற வகையில் அதன் கூட்டமைவு காணப்பட்டது.

**கணக்காய்வாளர்கள்**

இப்பணியை தொடர்ச்சியாக நிறைவேற்றுவதன் பொருட்டு ஒழுங்கு விதியொன்றின் மூலம் கணக்காய்வாளர் தலைமையதிபதி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பணிப்பாளர் சபையின் சார்பில் கையொப்பமிடப்பட்டது.

தலைவர்

பணிப்பாளர்

# சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் பிரிவுத் தலைவர்கள்

| சிரேஸ்ட முகாமைத்துவம் | பெயர் |
|---|---|
| தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் | திரு. ஆசிரி வலிசங்ர |
| பொது முகாமையாளர் | திருமதி சமிலா இத்தமல்கொட |
| பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் | திரு.எம்.என்.மகேஷ் மென்டிஸ் |
| பிரதிப் பொது முகாமையாளர் - நிதி | திருமதி.ஜ.எம். தம்ம குமாரி இலங்கசிங்க |
| பிரதிப் பொது முகாமையாளர் – நிர்வாகம் | திரு.சந்தருவன் பெரேரா |
| உதவிப் பொது முகாமையாளர் – நிதி | திரு.சத்துர கயான் பெரேரா |
| உதவிப் பொது முகாமையாளர் – நிர்வாகம் | திரு. நிரோஷ் பண்டார |

## பிரிவுத் தலைவர்கள்

இரசாயனப் பொருட்கள் மற்றும் அதனுடன் இணைந்த உற்பத்திகள் பிரிவு
முகாமையாளர் — திரு.கே.எச்.குணவர்த்தன

அலுவலக வழங்கல் பிரிவு
முகாமையாளர் — செல்வி.என்.பீ.ரணசிங்க

விட்டு மற்றும் பொழுதுபோக்கு உபகரணப் பிரிவு
முகாமையாளர் — திரு.கயான் போகஹவத்த

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு
உதவி முகாமையாளர் — திரு.எம்.ரீ. பண்டார

மின் மற்றும் மின்னணுப் பரிவு
உதவி முகாமையாளர் — திரு. கெ ஜி சி ஜனக

விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பிரிவு
முகாமையாளர் — திருமதி.மதுஷானி அக்குருகொட

கட்டுமானம். உலோகப்பொருட்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்கள் பிரிவு
உதவி முகானமயாளர் — திரு.அநுராத மகேஷ்

வாகன உற்பத்திப் பிரிவு
உதவி முகாமையாளர் — திரு.டீ.பீ.குமார

துரிதமாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்கள் பிரிவு
உதவி முகாமையாளர் — திரு.டீ.பீ.குமார

# சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் பிரிவுத் தலைவர்கள்

| பிரிவுத் தலைவர்கள் | பெயர் |
|---|---|
| **தீர்வைவரியற்ற கடை** | |
| உதவி முகாமையாளர் | திரு.கே.ஜீ.சீ. ஜனக |
| **பெறுகைப் பிரிவு** | |
| முகாமையாளர் | திரு.தனுஷ்க புஷ்பகுமார |
| **நிதிப் பிரிவு** | |
| முகாமையாளர் | திருமதி.ஐ.கே.பீ.பீ.பெரேரா |
| முகாமையாளர் (பதில்) | திருமதி.பீ.ஆர்.டீ. பீரிஸ் |
| உதவி முகாமையாளர் | செல்வி.என்.ஈ. இல்லிபன்கமுவ |
| **தகவல் தொழில்நுட்பப் பிரிவு** | |
| பதில் சிரேஸ்ட முகாமையாளர் | திரு. நிரோஷ் பண்டார |
| **சேவைகள் மற்றும் வழங்கல்கள்** | |
| உதவி முகாமையாளர் | திருமதி.கே.எச். அனுபமா பீரிஸ் |
| **கணக்காய்வுப் பிரிவு** | |
| உதவி உள்ளக கணக்காளர் | திருமதி எம் மதுஷா அமாலி டயஸ் |
| **மனித வளம் மற்றும் சட்டப் பிரிவு** | |
| சட்ட உத்தியோகத்தர் | திருமதி லக்மாலி குலரத்ன |
| முகாமையாளர் | திருமதி தர்ஷனா பத்திரன |

## கிளைகளும் காட்சியறைகளும்

| | |
|---|---|
| 1. தலைமைக் காட்சியறை நவம் மாவததை காட்சி யறை | இல 100, நவம் மாவத்தை சொழும்பு 02. |
| 2. குருநாகல் காட்சியறை | இல 243/3/1, புத்தளம் வீதி, குருநாகல் |
| 3. கண்டி காட்சியறை | இல 449, வில்லியம் கொப்பல்லவ விதி, கண்டி |
| 4. மாத்தறை காட்சியறை | இல 11, YMCA கட்டிடம், புகையிரத நிலைய வீதி, மாத்தறை |
| 5. அநுராதபுரம் காட்சியறை | இல 561-B, 38 4ஆம் குறுக்கு வீதி, அநுராதபுரம். |
| 6. யாழ்ப்பாண காட்சியறை | இல 127, MPCS கட்டிடம் காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் |
| 7. மட்டக்களப்பு காட்சியகம் | 32ஏ மற்றும் 32பி, புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு |

# எமது உற்பத்தித் தொகுதி




### அலுவலக வழங்கல் மற்றும் உபகரணங்கள்

டபிள் A & ஏனைய நிழல்பட கடதாசிகள். பலகைகள், கடதாசி வகைகள் புத்தகங்கள், பைல்கள் மற்றும் போல்டர்கள், கடித உறைகள், அலுவலக பைகள் மற்றும் பிரீ/ப்கேஸ்கள் பேனாக்கள் மற்றும் பென்சில்கள் வென் பலகைகள் மற்றும் மாக்கர்கள் கத்தரிக்கோல், காகித கத்திகள் மற்றும் காகித சிறு துண்டாக்கும் கருவிகள், கால்குலேட்டர்கள், ஸ்டேப்லர்கள் மற்றும் பஞ்சர்கள், இருவட்டுகள் மற்றும் டிவிடிகள் யூ.எஸ்.பி டிரைவ்கள் மற்றும் பிற காகிதாதிகள்.

### வீட்டு உபகரணங்கள்

அலுமினியப் பொருட்கள், பீங்கான் தயாரிப்புகள், நான்ஸ்டிக் சமையலறை பொருட்கள், அனைத்து வகையான துப்புரவுப் பொருட்கள் விளையாட்டுப் பொருட்கள், அனைத்து வகையான பிளாஸ்டிக் பொருட்கள், கோப்பைகள் மற்றும் சாஸர்கள் முள்கரண்டி மற்றும் பீங்கான் பொருள்கள் கெட்டில்ஸ் மற்றும் ஜக்ஸ், இராக்கைகள் மற்றும் தட்டுகள் வென்னீர் குடவை (பிளாஸ்க்குகள்), நீர் வடிகட்டிகள் மற்றும் சுத்திகரிப்பிகள், தலையணைகள், மெத்தைகள் மற்றும் மெத்தை விரிப்புகள், ரப்பர், தும்பு தரைவிரிப்புகள், தராசுகள் மற்றும் மழை அங்கிகள், குடைகள், திசுக்கள், காடதாசி துடைப்பான்கள், ஏனைய கடதாசி உற்பத்திகள், சுவர்க் கடிகாரங்கள்.






### தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு பாகங்கள்

மடிக்கணினிகள், டெஸ்க்டாப் கணினிகள், அச்சுப்பொறிகள், தொலைநகல் இயந்திரங்கள், ஸ்கேனர்கள் யு.பி.எஸ், புகைப்பட நகல் இயந்திரங்கள், பிற கணினிப் பாகங்கள்.

### மின் மற்றும் மின்னணுப் பாகங்கள்

ஏர் கண்டிஷனர்கள், கே.டி.கே.மின்விசிறிகள், டிஜிட்டல் கெமராக்கள் (அசைவற்ற, விடியோ) மற்றும் ஒளிரும் விளக்குகள், மல்டிமீடியா ப்ரொஜெக்டர்கள் மற்றும் திரைகள் உட்புற மற்றும் வெளிப்புற ஒலிவாங்கிகள், ஆடியோ பெருக்கிகள், மிக்சர்கள் மற்றும் மைக்ரோபோன்கள், ஜெனரேட்டர்கள், அணுகல் கட்டுப்பாட்டு முறைமைகள், சி.சி.டி.வி முறைமைகள், விரல் அடையாள இயந்திரங்கள், பல்புகள் (சி.எ.ஃப்.எல். ஃப்ளோரசன்ட்) & அவசர விளக்குகள், தொலைபேசிகள், வயரிங் பாகங்கள், பிற மின் பாகங்கள்.





# எமது உற்பத்தித் தொகுதி



## எமது உற்பத்தித் தொகுப்பு

துரிதமாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்கள்
விட்டில் சுகாதாரத்தைப் பேணுவதற்குத் தேவையான தயாரிப்புகள்
தனிப்பட்ட துப்பரவேற்பாட்டுப் பொருட்கள் உணவு வகைகள்

## டயர் மற்றும் வாகனங்களின் பெட்டரிகள்

EXIDE
YOKOHAMA. NANKANG







## விவசாய உபகரணங்கள், இயந்திர கருவிகள் மற்றும் உலோகப்பொருள்கள்

முள் கம்பிகள், பற்றைகளை வெட்டும் கருவிகள், மற்றும் புல் வெட்டும் கருவிகள் மற்றும் புல் மட்டம் வெட்டும்கருவிகள், வெல்டிங் மின்மாற்றிகள், கத்திகள், அனைத்து வகையான பவர் டூள்கள், அனைத்து வகையான கைக் கருவிகள், நீர் குழாய்கள், பாதுகாப்பு உபகரணங்கள் (ஹெல்மெட், கையுறைகள் மற்றும் பூட்ஸ்) கொத்துக்கரண்டி, அலவாங்கு, சவல் மற்றும் இரேக்கைகள் பாலித்தீன் சீலர்கள், ஃபோகிங் இயந்திரங்கள்

# எமது உற்பத்தித் தொகுதி




## உள்ளக வடிவமைப்பு மற்றும் அலுவலக தளபாடங்கள்

உருக்குத் தளபாடங்கள் (நாற்காலிகள், மேசைகள், அலுமாரி, கெபினட், புத்தக இராக்கைகள்) மர தளபாடங்கள் நாற்காலிகள், மேசைகள், அலுமாரி, கெபினட், புத்தக இராக்கைகள்) மெலமைன் தளபாடங்கள் (நாற்காலிகள், மேசைகள், அலுமாரி, கெபினட், புத்தக இராக்கைகள்)

## இரசாயனப் பொருள்கள்

கைத்தொழில் இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், விசேட இரசாயனப் பொருள்கள், தெரிவு செய்யப்பட்ட வெடிக்கும் இரசாயனப் பொருள்கள்.






## தீர்வைவரியற்ற கடை

இராஜதந்திரிகளினதும் இராஜதந்திர தூதுக்குழுக்களினதும் தேவைகளுக்கான வசதிகளை வழங்குகின்றன.

# வர்த்தக மீளாய்வு

விற்பனை வளர்ச்சி (ரூ.மில்லியன்)




வரி வளர்ச்சிக்குப் பின்னரான நிகர இலாபம் (ரூ.மி)



# தொழில் உருவாக்கம்

## 2019 - 2024

2019/2020 தொடக்கம் 2023/2024 தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை

### 2019 - 2020

மொத்த ஊழியர்கள் 398

- நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஊழியர்கள் **211**
- விற்பனை ஊழியர்கள் **187**

### 2020 - 2021

மொத்த ஊழியர்கள் 374

- நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஊழியர்கள் **169**
- விற்பனை ஊழியர்கள் **205**

### 2021 - 2022

மொத்த ஊழியர்கள் 392

- நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஊழியர்கள் **185**
- விற்பனை ஊழியர்கள் **207**

### 2022 - 2023

மொத்த ஊழியர்கள் 336

- நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஊழியர்கள் **154**
- விற்பனை ஊழியர்கள் **182**

### 2023 - 2024

மொத்த ஊழியர்கள் 300

- நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஊழியர்கள் **171**
- விற்பனை ஊழியர்கள் **129**

# நிறுவன ஆளுகை

கடந்த ஆண்டு எஸ்.டி.சி.யின் முகாமைத்துவமானது ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் சிறந்த வணிக நடைமுறைகளை மீண்டும் உயிர்பூட்டுவதற்காக முயற்சித்தது. அதற்கு மேலதிகமாக, கூட்டுத்தாபனமானது ஒரு தனியான உள்ளகக் கணக்காய்வு பிரிவைக் கொண்டுள்ளதுடன் சிறந்த கட்டுப்பாட்டுச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளன மேலும், பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்ற தனியான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று உள்ளது.
அரசாங்கப் பெறுகை நடைமுறைக்கு ஏற்ப பெறுகை பொறிமுறையை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் கேள்விப்பத்திர சபை தாபிக்கப்பட்டுள்ளது.

### பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்

**தலைவர்எம்டி**
**திரு. ஆசிரி வலிசுந்தர**
(05.09.2022 இணைதல்)

- **திரு.பீ.ஏ.ரீ. ரொட்றிகோ** – பணிப்பாளர்
- **திரு.டீ.ஏ. ஹெட்டிஆரச்சி** – பணிப்பாளர்
- **திரு.யூ. திசாநாயக்க** – பணிப்பாளர்
- **திரு.டீ.ஜே. விதானாச்சி** – பணிப்பாளர்
- **திருமதி.ஜீ. தஹநாயக்க** – பணிப்பாளர்
- **திரு.ரீ.ஏ.டீ. ரஞ்சித்** – பணிப்பாளர்

### கணக்காய்வுக் குழு அங்கத்தவர்கள்

**திரு.பீ.ஏ.ரீ. ரொட்றிகோ**
குழுவின் தலைவர்

- **திருமதி.ஜீ. தஹநாயக்க** – பணிப்பாளர்
- **திரு.டீ.ஜே. விதானாச்சி** – பணிப்பாளர்

- 2023/2024 ஆம் ஆண்டில், பதின்மூன்று (13) வாரியக் கூட்டங்களும் நான்கு (4) தணிக்கைக் குழுக் கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

### வர்த்தக முகாமைத்துவக் கருவிகள் கிடைக்கக்கூடிய தன்மை



1. கூட்டுத்திட்டம் 2022/2027
2. வருடாந்த அறிக்கை 2021/2022
3. STC பெறுகை செயன்முறைகள்
4. STC செயற்பாட்டுத் திட்டம்
5. STC உற்பத்தித் தொகுப்பு
6. STC தொகுப்பு
7. STC கடனுக்கான விற்பனைக் கொள்கை
8. STC இருப்பு கட்டுப்பாட்டு கொள்கை
9. STC அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

# நிதிசார் சிறப்பம்சங்கள்

| | 2023/2024 (ரூ.000'S) | 2022/2023 (ரூ.000'S) | வித்தியாசம்% ↑ -/↓ |
|---|---|---|---|
| **தொழிற்பாடு** | | | |
| புரள்வு | 12,132,030 | 9,416,776 | 29% |
| வட்டி மற்றும் வரிக்கு முந்திய ஈட்டல்கள் | 1,293,575 | 383,501 | 237% |
| வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம் | 1,498,934 | 731,165 | 105% |
| வரிவிதிப்புக்கு பின்னரான இலாபம் | 963,204 | 532,775 | 81% |
| **ஐந்தொகை** | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 4,118,664 | 632,397 | 551% |
| நடைமுறைச் சொத்துக்கள் | 4,457,573 | 4,213,431 | 6% |
| நடைமுறை பொறுப்புக்கள் | 2,246,377 | 2,885,147 | -22% |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 160,198 | 178,433 | -10% |
| பிரகடனப்படுத்தப்பட்ட மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | 6,169,663 | 1,782,247 | 246% |
| **காசுப்பாய்ச்சல்** | | | |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ஈட்டப்பட்ட தேறிய தொகை | - 1,078,218 | 153,186 | -804% |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட தேறிய தொகை | - 1,377,136 | 92,532 | -1588% |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து ஈட்டப்பட்ட தேறிய தொகை | 351,599 | 115,616 | 204% |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து ஈட்டப்பட்ட தேறிய தொகை | 836,298 | - 711,081 | -218% |
| **பங்குக்கான தரவுகள்** | | | |
| பங்குக்கான ஈட்டல்கள் | 97 | 54 | 80% |
| பங்கொன்றின் தேறிய சொத்துக்கள் | 617 | 178 | 246% |
| உரிமையாண்மை மீதான வருவாய் (ROE) | 0.74 | 0.36 | 105% |
| சொத்துக்கள் மீதான வருவாய் (ROA) | 0.68 | 0.12 | 468% |
| **முக்கியமான விகிதங்கள்** | | | |
| மொத்த இலாப விகிதம் | 16% | 11% | 5% |
| தேறிய இலாப விகிதம் | 12% | 8% | 4% |
| துரித விகிதம் | 1.50 | 0.95 | 58% |
| நடைமுறை விகிதம் | 1.98 | 1.46 | 36% |
| கடன் உரிமை விகிதம் | 0.19 | 0.07 | 176% |

# நிதிசார் சிறப்பம்சங்களின் வரைபட தோற்றம்

புரள்வு

| வருடம் | (ரூ.மி) |
|---|---|
| 14/15 | 3862 |
| 15/16 | 2949 |
| 16/17 | 3749 |
| 17/18 | 4334 |
| 18/19 | 3474 |
| 19/20 | 2454 |
| 20/21 | 2677 |
| 21/22 | 8750 |
| 22/23 | 9417 |
| 23/24 | 12132 |




வரிக்கு முந்திய தேறிய இலாபம்

| வருடம் | (ரூ.மி) |
|---|---|
| 14/15 | 11 |
| 15/16 | 31 |
| 16/17 | 61 |
| 17/18 | 82 |
| 18/19 | -32 |
| 19/20 | -125 |
| 20/21 | 47 |
| 21/22 | 482 |
| 22/23 | 731 |
| 23/24 | 1499 |




மொத்தச் சொத்து

| வருடம் | (ரூ.மி) |
|---|---|
| 14/15 | 3051 |
| 15/16 | 2694 |
| 16/17 | 2650 |
| 17/18 | 2994 |
| 18/19 | 2796 |
| 19/20 | 2493 |
| 20/21 | 2515 |
| 21/22 | 5917 |
| 22/23 | 4846 |
| 23/24 | 8576 |



### உரிமையாண்மை

| வருடம் | (ரூ.மி) |
|---|---|
| 14/15 | 695 |
| 15/16 | 707 |
| 16/17 | 759 |
| 17/18 | 820 |
| 18/19 | 786 |
| 19/20 | 651 |
| 20/21 | 701 |
| 21/22 | 1131 |
| 22/23 | 1782 |
| 23/24 | 6170 |




### EPS(ரூ.)




### ROE(ரூ.)



# கூட்டுத்தாபனத்திற்கான பிரிவுகளின் செயலாற்றுகை

## வருவாய் ஈட்டுனர்கள் 2023-2024




## வருவாய் ஈட்டுனர்களின் செயலாற்றுகை 2023/2024

| பிரிவு | வருவாய் | மொ.இ | மொ.இ% |
|---|---|---|---|
| CA பிரிவு | 678,199,226 | 256,076,265 | 38% |
| ICT பிரிவு | 660,086,111 | 77,400,522 | 12% |
| OS பிரிவு | 393,593,416 | 72,604,137 | 18% |
| AP பிரிவு | 229,435,930 | 36,052,117 | 16% |
| DFS பிரிவு | 11,575,579 | 4,062,009 | 35% |
| EE பிரிவு | 2,307,097,373 | 417,224,615 | 18% |
| SPU பிரிவு | 103,543,497 | 18,048,362 | 17% |
| HR பிரிவு | 167,150,581 | 25,508,804 | 15% |
| CH பிரிவு | 175,294,346 | 22,639,130 | 13% |
| EF, AS & ME பிரிவு | 7,302,373,880 | 1,015,679,940 | 14% |
| SW பிரிவு | 103,679,769 | 21,916,044 | 21% |
| மொத்தம் | 12,132,029,706 | 1,967,211,946 | 16% |

# பிரிவுசார் செயலாற்றுகை ஒப்பீடு (2022-2023 /2023-2024)

| பிரிவு | 2022/2023 (ரூபா) | | மொத்த இலாபம் % | 2023/2024 (ரூபா) | | மொத்த இலாபம் % | % ↑ / ↓ | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விற்பனை | மொத்த இலாபம் | | விற்பனை | மொத்த இலாபம் | | விற்பனை | மொ.இ. | மொ.இ.% |
| CA பிரிவு | 989,466,830 | 336,774,106 | 34% | 678,199,226 | 256,076,265 | 38% | -31% | -24% | 4% |
| ICT பிரிவு | 358,777,332 | 24,780,251 | 7% | 660,086,111 | 77,400,522 | 12% | 84% | 212% | 5% |
| OS பிரிவு | 372,467,640 | 110,702,911 | 30% | 393,593,416 | 72,604,137 | 18% | 6% | -34% | -11% |
| AP பிரிவு | 242,593,285 | 32,367,653 | 13% | 229,435,930 | 36,052,117 | 16% | -5% | 11% | 2.4% |
| DFS பிரிவு | 19,268,522 | 6,009,146 | 31% | 11,575,579 | 4,062,009 | 35% | -40% | -32% | 4% |
| EE பிரிவு | 213,499,779 | 32,480,523 | 15% | 2,307,097,373 | 417,224,615 | 18% | 981% | 1185% | 3% |
| SPU பிரிவு | 105,450,290 | 17,868,546 | 17% | 103,543,497 | 18,048,362 | 17% | -2% | 1% | 0% |
| HR பிரிவு | 400,374,661 | 64,927,777 | 16% | 167,150,581 | 25,508,804 | 15% | -58% | -61% | -1% |
| CH பிரிவு | 268,200,300 | 31,077,606 | 12% | 175,294,346 | 22,639,130 | 13% | -35% | -27% | 1% |
| EF, AS & ME பிரிவு | 6,378,694,690 | 349,158,110 | 5% | 7,302,373,880 | 1,015,679,940 | 14% | 14% | 191% | 8% |
| SW பிரிவு | 67,982,942 | 13,112,918 | 19% | 103,679,769 | 21,916,044 | 21% | 53% | 67% | 2% |
| **மொத்தம்** | **9,416,776,272** | **1,019,259,548** | **11%** | **12,132,029,706** | **1,967,211,946** | **16%** | **29%** | **93%** | **5.39%** |

## பிரிவுசார் வருமான ஒப்பீடு




## பிரிவுசார் மொத்த வருமான ஒப்பீடு



# கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

எனது இல: TAC/D/STC/F/A/2023/24/17 : 2024 அக்டோபர் 30

தலைவர்,
வ/ப இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம்.

**வ/ப இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் 2024 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள், ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் (“கம்பெனி”) 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, த்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளைக் கொண்டமைந்த 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பெனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்து காட்டப்படலாகாது என்றபோதிலும் 373,351,128 ரூபாவான வர்த்தக கடன்தருநர் நிலுவைக்கு 11,906,646 ரூபாவான வருமதி நிலுவைகளை எதிரீடு செய்து நிகரப் பெறுமதியான 361,444,482 ரூபா செலுத்தப்பட வேண்டிய நிலுவையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 16 ஆம் பந்திக்கு முரணாக நிலையான வைப்புக்கள் மற்றும் ஏனைய குறுகிய கால வைப்புக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த 315,088,866 ரூபா ஆன தேறிய முதலீட்டினை நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நிதிச் செயற்பாடுகளின் ஊடாக கிடைத்த நிதிப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த நிதிப் பாய்ச்சலைக் கணக்கிடும்போது அரச அளிப்புகளுக்கான பிற்போடப்பட்ட வருமானம் 24,437,682 ரூபா இரு தடவைகள் கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருப்பதன் மூலம் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த நிதிப் பாய்ச்சல் அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் அளவுசார் முன்காலகட்டங்களுக்கான தவறுகள் பின்னோக்கிய விளைவுகளுடன் சரிசெய்யப்பட வேண்டும் என்பதோடு நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் பிழைகளை சரிசெய்தல் பற்றிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் நிறுவனம் அந்த நியமத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக கடந்த வருடத்தில் அரிசி இறக்குமதிக்கான செலாவணி இலாபம் 440,670,002 ரூபாவும், செலாவணி நட்டம் 27,863,304 ரூபாவும், மேற்படி அரிசி இறக்குமதிக்கான செலவுகள் மற்றும் இருப்புச் சேதங்களின் மொத்தம் 23,869,693 ரூபாவும் விற்பனை கிரயத்தில் முறையே வரவு மற்றும் பற்று வைத்திருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் படி நிதிக் கூற்றுக்களில் நடைமுறையல்லா பொறுப்புகளில் காட்டப்பட வேண்டிய 30,437,267 ரூபா பிற்போடப்பட்ட வரி பொறுப்பு, நடைமுறையல்லா சொத்துக்களில் இருந்து கழித்து தேறிய பிற்போடப்பட்ட சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் அரச அளிப்புகளுக்கான கணக்குப் பதிதல் முறையியல் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நியமத்தின் 26 ஆம் பந்தியின் பிரகாரம் அரச அளிப்புகளின் பெறுமதி குறிப்பிட்ட சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதிலும் முறையாக பகிர்ந்தளிக்கப்பட்டு மீளாய்வு ஆண்டுக்கான வருமானம் பிற்போடப்பட்ட வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுவதற்குப் பதிலாக குறிப்பிட்ட வருமானம் 24,437,668ஷரூபா சொத்துக்களின் தேய்மானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கடந்த வருடத்தின் வருமானம் மற்றும் தேய்மான செலவினம் அந்த அளவினால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) காலங்கடந்த வைன் இருப்புக்காக மேற்கொள்ளப்பட்ட 4,285,347 ரூபா செலவினம் மற்றும் அரச நிறுவனங்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 22 நடமாடும் நெற்களஞ்சியங்களுக்கான கிரயமாகிய 42,351,980 ரூபா மீளாய்வு ஆண்டில் விற்பனை கிரயத்திற்கு பற்று வைப்பதன் மூலம் மொத்த லாபம் 46,637,327 ஷரூபாவினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(எ) பௌதீக இருப்புகளுக்கான ஒப்பாய்வின்போது இனங்காணப்பட்ட இருப்புமிகை மற்றும் சரி செய்தல்களின் மொத்தம் 23,064,553 ரூபா ஆனது கடந்த ஆண்டின் பிழைகள் சரி செய்தலாக விற்பனை கிரயத்திலிருந்து குறைத்து காட்டப்பட்டிருப்பதன் காரணமாக அந்த அளவினால் விற்பனைக் கிரயம் குறைவாகவும் மொத்த லாபம் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2017 முதல் 2024 வரையான காலப்பகுதியில் வெளித்தரப்புகளினால் வங்கியில் மேற்கொள்ளப்பட்டிருந்த 2,820,094 ரூபா நேரடி வைப்புகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்குப் பதிவதற்குப் பதிலாக வேறு கடன் தருநர்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மட்டக்களப்பு ரஜவாச கட்டடத்தின் ஒரு பகுதி லங்கா சதோச லிமிடெட் நிறுவனத்திற்கு கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டது சார்பாக நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய 7,279,191 ரூபா வருமானம் கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஒ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செய்யப்பட்ட பணவனுப்பல்களின் படி மீளாய்வு ஆண்டுக்காக சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிச் செலவு 83,347,166 ரூபா என்ற போதிலும் நிதிக் கூற்றுக்களில் 86,942,743 ரூபா என காட்டப்பட்டிருப்பதன் மூலம் 3,595,577 ரூபா வித்தியாசம் காணப்பட்டது.

(ஓ) விற்பனைப் பெறுமதியானது சேர் பெறுமதி மீதான வரி அறிக்கைகளின் படி 12,643,327,250 ஷபா மற்றும் நிதி கூற்றுக்களின் படி 12,132,029,706 ரூபாவாக காணப்படுவதால் மேற்படி பெறுமதிகளுக்கு இடையில் 511,297,543 ஷபா வித்தியாசம் காணப்பட்டதோடு கொள்வனவுப் பெறுமதியானது சீர் பெறுமதி மீதான வரி அறிக்கைகளின் படி 3,753,542,154 ரூபா மற்றும் நிதிக்கூற்றுக்களின் படி 9,796,491,313 ரூபாவாக அமைவதன் மூலம் மேற்படி பெறுமதிகளுக்கு இடையில் 6,062,949,159 ரூபா வித்தியாசம் காணப்பட்டது.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிறுவனத்தின் 2023/2024 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் எனக்கு வழங்க எதிர்பார்க்கப்படும் நிறுவனத்தின் 2023/2024 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதுபற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களாக கருதப்படும். குறித்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் அரவணைக்கப்படமாட்டாது என்பதுடன் அது தொடர்பிலான எத்தகைய உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுக்குரியதாக எனது பொறுப்பாக இருப்பது மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிப்பதும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறுவகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையான வகையில் இணங்கவில்லையா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதுமாகும்.

நிறுவனத்தின் 2023/2004 வருடாந்த அறிக்கையை வாசிக்கும்போது அதில் பொருண்மையான தவறுகள் காணப்படுவதாக தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அதனை நிர்வாகத் தரப்பினர்களுக்கு தொடர்பாடல் செய்தல் வேண்டும். மேற்கொண்டும் சரிசெய்யப்படாத தவறுகள் இருக்குமாயின் அவை அரசியலமைப்பின் 154(6)இன் பிரகாரம் உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் எனது அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவதற்கான அதன் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்போது அது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கும் நோக்கம் இல்லாத போதிலும் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவனத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை முடிவுறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிப்பீடு செய்யப்பட்டது.

- எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை தரப்புகள் விழிப்பூட்டப்பட்டன.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை**

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் தாக்கத்தினை தவிர, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு எனது விசாரணையின் மூலம் காணப்படுகின்ற வகையில் உரிய நிதிசார் அறிக்கைகள் நிறுவனத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியின் 1.2(அ) பந்தியில் தரப்பட்டுள்ள அவதானிப்பினைத் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டதனுள் பின்வரும் கூற்றுக்களை முன்வைக்கும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் ஓர் அங்கத்தவருக்கு நிறுவனம் தொடர்புபட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வர்த்தக நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர சம்பந்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாத வகையில் செய்யப்பட்டுள்ளது என்பது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் கட்டளைகளுக்கான தொடர்பு | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) PED 1/2015ஆம் இலக்க 2015 மே 25 ஆம் திகதிய அரச தொழில்முயற்சி சுற்றறிக்கை மற்றும் அரச தொழில்முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2023 அக்டோபர் 05 ஆம் திகதிய No. PED/S/STC/03/II(i) ஆம் இலக்க கடிதம். | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மற்றும் அரச தொழில்முயற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த மீளளிப்பு முறையியலுக்கு முரணாகஉத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்தினைக் கொண்டிராத நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 42 அலுவலர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட 09 அலுவலர்ளுக்கும் மீளாய்வு ஆண்டில் முறையே 2,711,750 ரூபா மற்றும் 972,500 ரூபா மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பீஈடீ 01/2021 ஆம் இலக்க அரச தொழில் முயற்சி சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரச தொழில் முயற்சிகளுக்கான தொழிற்பாட்டு கையேட்டின்<br>(i) 3.2 (i) பந்தி<br>(ii) 6.7 பந்தி | திறைசேரியின் அங்கீகாரம் இன்றி பண்டிகை மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளாக 41,679,289 ரூபாவும், மருத்துவ செலவுகளை மீளளிப்பதற்காக 3,846,978 ரூபாவும் மரணப் பணிக்கொடையாக 700,000 ரூபாவும் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தன.<br><br>நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் வருடாந்த பொருள் கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என்ற போதிலும் மீளாய்வு ஆண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட 977,631,425 ரூபாவான நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டின் பின்னர் பௌதீக ஒப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2005 மே மாதம் 06 ஆம் திகதிய 415 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின்<br>(iii) ஆம் பந்தி. | கப்பல் மூலம் பொருட்களை இறக்குமதி செய்கின்ற அனைத்து நிறுவனங்களும் பொருள் போக்குவரத்து நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட கப்பல் லங்கா கூட்டுத்தாபனத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டும் என்பதோடு கப்பல் கூட்டுத்தாபனத்தின் கப்பல் கட்டணம் ஏற்றுமதியாளரின் கப்பல் கட்டணத்தை விட அதிகரிக்கும் போது அது தொடர்பாக காட்டப்படுகின்ற கைவிடுதல் அறிவித்தல் ஒன்றை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற போதிலும் மாதிரிகள் கணக்காய்வுக்கு உள்ளான 18 சந்தர்ப்பங்களுள் 16 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுக் கப்பல் கம்பெனிகள் ஊடாக இறக்குமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு அதன்போது கைவிடல் கட்டளைகள் 2 சந்தர்ப்பங்களில் மட்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>அதன்படி 22,479 அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுக் கப்பல் கம்பெனிகளுக்கு செலுத்தப்பட்டு இருந்ததால் நாட்டிலிருந்து அந்நியச் செலாவணி வெளியில் சென்றிருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவனத்தின் தத்துவங்கள், கருமங்கள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் உரிய காலப்பகுதிகளில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(அ) மற்றும் (இ) பிரகாரம் நிறுவனத்தின் கொள்வனவுகள் தொடர்பில் பிரதான மற்றும் விபரமான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தின் மூலதன கொள்வனவுகளுக்காக பெறுகை செலவின மதிப்பீடு மட்டும் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முறையான பெறுகை முறையியல்களைப் பின்பற்றாமல் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 3,144,025 ரூபாவை செலுத்தி நிறுவனத்தின் வெளி வளாகத்தில் ஒரு பகுதி தாரிட்டு காப்பட் செய்யப்பட்டிருந்ததோடு கல்வி அமைச்சின் தேவைக்காக 98,550,332 ரூபா பெறுமதியான தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தன.

(இ) 2023 சனவரி 03 ஆம் திகதிய அப/22/2100/601/014/111 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் முட்டை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததோடு மீளாய்வு ஆண்டில் 496,000,000 ரூபா பெறுமதியுடன்கூடிய 18,420,480 முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அதன்போது 200 மி.ரூபாவுக்கு மேற்பட்ட கொள்வனவுகள் தொடர்பில் பெறுகை வழிகாட்டல்கள் 2.14.1 இன் படி நியமிக்கப்பட வேண்டிய அமைச்சரவை பெறுகைக் குழுவிற்குப் பதிலாக திணைக்கள பெறுகைக் குழுவொன்றினால் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளுக்கான தடை நீக்கம் மற்றும் களஞ்சியப்படுத்தல் பெறுகையின் போது பெறுகை வழிகாட்டல் 2.4.8 இன்படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமித்து 8.9.1 வழிகாட்டல்களின் படி சேவை வழங்குநருடன் ஒப்பந்தம் எட்டப்படவில்லை.

(ஈ) ஒப்பந்தப் பெறுமதி 5,987,529 ரூபாவான தீர்வையற்ற கடையை புதுப்பிக்கும் பெறுகைக்கான பெறுகை வழிகாட்டல் 2.8.4இன் படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) கம்பெனியினால் 2015 ஆம் ஆண்டில் 96,254,510 ரூபா கிரயத்துடன்கூடிய நடமாடும் நெல் சேகரிப்பு களஞ்சியங்கள் (Cocoon) 50ஐ பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து அவற்றுள் 15 அலகுகள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. 7 வருடங்களுக்கும் மேலாக விற்பனை செய்யப்படாமல் இருந்த 25,026,173 ரூபா கிரயத்துடன்கூடிய 13 அலகுகள் 2022 ஆம் ஆண்டும், 42,351,984 ரூபா கிரயத்துடன்கூடிய 22 அலகுகள் மீளாய்வு ஆண்டிலும் அரச நிறுவனங்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததால் ஒட்டுமொத்த கருத்திட்டத்தின் நட்டமானது 67,378,157 ரூபாவாக அமைந்திருந்தது.

(ஆ) மீளாய்வு ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதியில் கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 315 என்பதோடு உண்மையாக உள்ள பதவியணியினர் 286 என்பதால் அன்றைய தினத்தில் 77 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் நிறைவேற்றுத்தர வெற்றிடங்கள் 10 காணப்பட்டதுடன் இதற்கு மேலதிகமாக 48 மிகை பணியாளர்கள் காணப்பட்டனர்.

(இ) மீளாய்வு ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 04 செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அடையப்பட்ட வருமானத்தின் வளர்ச்சி நூற்றுக்கு 50 வீதம் மட்டுமே ஆகும். பொருட்கள் மற்றும் சேவை வழங்கலின் அளவினை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 14 செயல்பாடுகளுக்கு மத்தியில் 11 செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதால் ஒட்டுமொத்த செயற்பாடுகளுடன் ஒப்பிடும்போது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் அளவு நூற்றுக்கு 21 வீதமாக மட்டுமே அமைந்திருந்தது. மேலும் பாடசாலை மாணவர்களுக்கு அடிப்படை கணினி அறிமுகம் மற்றும் கணனிசார் புதிய உருப்படிகளின் அறிமுகம் ஆகிய 2 கருத்திட்டங்களின் முன்னேற்றம் முறையே நூற்றுக்கு 17 மற்றும் நூற்றுக்கு 4 வீதமாக மட்டும் அமைந்திருந்தது. ஆகக்குறைந்தது ஒரு பொருளை அல்லது ஒரு வர்த்தகரை வெளிநாட்டுச் சந்தைக்கு அனுப்புவதற்கு நோக்கமாகக் கொண்டிருந்த போதிலும் அதனையும் நிறைவேற்றிக்கொள்ள தவறியிருந்தது.

.(ஈ) மீளாய்வு ஆண்டில் 08 Q -Shop விற்பனை நிலையங்களை வாசனைத் திரவிய கூட்டுத்தாபனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததோடு 03 விற்பனை நிலையங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஜுலை 25 ஆம் திகதி வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 920,000 ரூபா குத்தகை வருமானம் இழக்கப்பட்டிருந்ததோடு செயலற்று காணப்பட்ட மேற்படி 3 விற்பனை நிலையங்கள் சார்பாக வெளித் தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்த 480,000 ரூபா குத்தகை பயனற்ற செலவினமாக அமைந்திருந்தது. மேற்படி Q-Shop கருத்திட்டத்தின் ஊடாக மீளாய்வு ஆண்டில் 1,658,668 ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) மீளாய்வு ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் 822,322,109 ரூபாவாக காணப்பட்ட வர்த்தக கடனாளி நிலுவையில் 2 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான பழைய 133,352,935 ரூபா நிலுவைகளும், 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருகின்ற 177,479,439 ரூபா நிலுவைகளும் காணப்பட்டதோடு குறிப்பிட்ட கடன் நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 1,272,905,763 ரூபாவாகிய ஏனைய வருமதி நிலுவையில் உள்ளடங்கியுள்ள நீண்ட காலமாக இருந்து வருகின்ற 13,421,973 ரூபா அறவிடப்படாத நிலவையொன்றும் காணப்பட்டது.

(ஊ) மீளாய்வு ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் தேதியில் 361,444,482 ரூபாவாக காணப்பட்ட கடன் தருநர் நிலுவையில் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்படாத 90,514,335 ரூபா நிலுவை காணப்பட்டது. மேலும், 716,930,302 ரூபாவாகிய ஏனைய செலுத்த வேண்டிய நிலுவைகளில் உள்ளடங்கி நீண்ட காலமாக இருந்து வருகின்ற 15,789,605 ரூபா நிலுலைகளை உறுதிப்படுத்திக் கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வு ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் தேதியில் களஞ்சியத்தில் காணப்பட்ட 685,725,364 ரூபா கிரயத்துடன்கூடிய இருப்பில் உள்ளடங்கியுள்ள ஒரு வருடத்திற்கும் மேலான காலப்பகுதியில் அசையாத இருப்புகளின் பெறுமதி 155,109,130 ஸ்ரீரூபா என்பதோடு இந்த இருப்புகளுக்கு மத்தியில் காலம் கடப்பதற்கு அண்மித்துள்ள இருப்புகளை இனம் காண்பதற்கு பொருத்தமான முறையியல் கணக்கியல் முறைமையில் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கம்பெனியினால் உணவு ஆணையாளர் திணைக்களத்திலிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வேயான்கொடை களஞ்சியம் 2023 பிப்ரவரி முதல் 2024 பிப்ரவரி வரை செயலற்று காணப்பட்ட போதிலும் அதற்கு 2,400,000 ரூபா வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) மட்டக்களப்பு ரஜவாச கருத்திட்டங்களுக்கென 2021 செப்டம்பர் மாதம் முதல் 2023 ஜுன் மாதம் வரை உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடம் ஒன்று வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததோடு அக்கட்டிடத்தை நவீனமயப்படுத்துவது 2024 ஜுலை மாதம் 30 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை என்பதோடு அத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த 5,720,000 ரூபா வாடகை பயனற்ற செலவாக அமைந்திருந்தது.

(ஒ) மீளாய்வு ஆண்டின் நாராஹேன்பிட்டி ரஜவாச வர்த்தக கண்காட்சிக்கூட கருத்திட்டத்திற்கான குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் மாதாந்த மின் கட்டணப் பட்டியல்கள், நீர்க் கட்டண பட்டியல்கள் மற்றும் தொலைபேசிக் கட்டணப் பட்டியல்கள் உள்ளிட்ட சேவைக் கட்டணங்கள் இரண்டாம் தரப்பினரால் ஏற்கப்பட வேண்டும் என்ற போதிலும் மீளாய்வு ஆண்டுக்குரிய மின்சாரச் செலவுகள் மற்றும் நீர்க் கட்டணமாக 6,102,278 ரூபா அதாவது, கருத்திட்ட வருமானத்தில் நூற்றுக்கு 48 கம்பெனியினால் ஏற்கப்பட்டிருந்ததோடு கருத்திட்டத்தின் மூலம் 5,180,344 ரூபா நிகர நட்டம் ஏற்பட்டிருந்தது. இக்கட்டடத்தில் 25 விற்பனை கண்காட்சிக் கூடங்களைப் பேணிச் செல்வதற்கு இடவசதி காணப்பட்ட போதிலும் செயற்பட்டுவந்த 21 கண்காட்சிக் கூடங்களில் 11 கூடங்கள் மட்டும் அரச நிறுவனங்களாக அமைந்திருந்தது. அதன்படி ” அரச நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் விற்பனை செய்யப்படுகின்ற உற்பத்திகளை கொள்வனவு செய்யக்கூடிய விலைக்கு ஒரே கூரையின் கீழ் பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளை வழங்குதல்” எனும் கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பொலீஸ் விசேட அதிரடிப் படைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த ராஜகிரியில் அமைந்துள்ள கட்டிடத்துடன் கூடிய காணிக்காக 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதோடு முந்தைய ஒப்பந்தத்தின் பிரகாரம் 2024 ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை கிடைக்கப் பெற வேண்டிய 14,400,000 ரூபா வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தத்தின் 08 ஆம் பிரிவுக்கு முரணாக அனுமதியின்றி நிரந்தர நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

# விபரமான வருமானக் கூற்று

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

| | குறிப்பு | 2023/2024 ரூ.ச | 2022/2023 ரூ.ச |
|---|---|---|---|
| வருமானம் | 03 | 12,132,029,706 | 9,416,776,271 |
| செலவுக்கிரயம் | | (10,164,817,761) | (8,397,516,723) |
| மொத்த இலாபம் | | 1,967,211,946 | 1,019,259,548 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் / (செலவினம்) | 04 | 57,275,265 | 35,297,453 |
| | | **2,024,487,211** | **1,054,557,002** |
| | | | |
| வினியோக செலவுகள் | 05 | 221,093,107 | 233,327,415 |
| நிர்வாக செலவுகள் | 06 | 507,538,260 | 433,457,185 |
| | | **728,631,367** | **666,784,600** |
| | | | |
| **வட்டி மற்றும் வரிக்கு முந்திய ஈட்டல்கள்** | | **1,295,855,843** | **387,772,401** |
| தேறிய நிதி வருமானம் / செலவு | 07 | 205,359,103 | 347,663,542 |
| **வரிவிதிப்புக்கு முந்திய இலாபம் / நட்டம்** | | **1,501,214,947** | **735,435,943** |
| வரிவிதிப்பு | 08 | (535,046,293) | (199,671,154) |
| **வருடத்திற்கான மொத்த இலாபம் / (நட்டம்)** | | **966,168,654** | **535,764,789** |
| | | | |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | |
| ஊழியர் நலன்கள் மீதான ஆயுடகால இலாபம் / (நட்டம்) | | (2,280,886) | (4,271,080) |
| ஏனைய விரிவான வருமானங்களின் மீதான வரி | | (684,266) | 1,281,324 |
| சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு இலாபம் | | 3,615,021,486 | 113,699,964 |
| **ஏனைய விபரமான வருமானம் / (நட்டம்) - வரி தவிர்ந்த** | | **3,612,056,334** | **110,710,208** |
| **வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம்/(நட்டம்) - வரி தவிர்ந்த** | | **4,578,224,988** | **646,474,998** |
| | | | |
| பங்குக்கான அடிப்படை ஈட்டல் (நட்டம்) | 09 | 97 | 54 |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் விளக்கக் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்குகின்றன.
(அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன)

# நிதி நிலை பற்றிய அறிக்கை

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

| சொத்துக்கள் | குறிப்பு | 2023 / 2024 ரூ.ச | 2022 / 2023 ரூ.ச |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| அதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 10 | 4,123,444,204 | 566,611,360 |
| அருவச்சொத்துக்கள் | 10a | 8,025,000 | 9,330,001 |
| பங்குகளிலான முதலீடுகள் | 11 | 20 | 20 |
| ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் | 12A | 17,632,082 | 15,422,666 |
| தேறிய பிற்போடப்பட்ட வரிச் சொத்து | 17 | (30,437,267) | 41,032,830 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **4,118,664,040** | **632,396,876** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | 13 | 1,089,692,167 | 1,467,189,374 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பட வேண்டியவை | 14 | 1,911,080,785 | 1,030,577,057 |
| ஊழியர்களுக்கான கடன் - நடப்பு கால முதிர்ச்சி | 12A | 7,523,887 | 6,991,454 |
| நிலையான வைப்புக்களில் குறுகியகால முதலீடுகள் | | 1,358,308,950 | 1,668,700,000 |
| குறுகிய கால முதலீடுகள் - உருவாக்கப்பட்ட ஆதாய அளவு - மக்கள் வங்கி | | 18,688,366 | 25,266,927 |
| குறுகிய கால முதலீடுகள் - உருவாக்கப்பட்ட ஆதாய அளவு - தே.அ வங்கி | | 3,112,145 | 1,231,400 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 15 | 69,166,814 | 13,474,352 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **4,457,573,113** | **4,213,430,565** |
| **மொத்த சொத்துக்கள்** | | **8,576,237,152** | **4,845,827,423** |

| உரிமை முதலும் பொறுப்புக்களும் | | 2023 / 2024 ரூ.ச | 2022 / 2023 ரூ.ச |
|---|---|---|---|
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | |
| அறவிடப்பட்ட மூலதனம் ஒன்று 10 ரூபா வீதம் 10,000,000 பங்குகள் | | 100,000,000 | 100,000,000 |
| பொது ஒதுக்கங்கள் | | 45,607,646 | 45,607,646 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | | 3,969,829,684 | 354,808,198 |
| ஏனைய ஒதுக்கங்கள் | | (33,175,165) | (30,210,013) |
| தடுத்துவைக்கப்பட்ட ஈட்டல்கள் | | 2,087,400,340 | 1,312,041,000 |
| **மொத்த உரிமைக் குரல்** | | **6,169,662,506** | **1,782,246,831** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| இளைப்பாறல் நன்மை கடப்பாடுகள் | 16 | 40,446,241 | 34,243,718 |
| அரச மானியங்கள் மற்றும் பிற்போடப்பட்ட வருமனக் கணக்கு | 21 | 119,751,820 | 144,189,502 |
| **மொத்த நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | **160,198,062** | **178,433,220** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| குறுகிய கால கடன் | 18 | 791,639,266 | 13,600,000 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவை | 19 | 1,103,866,032 | 2,765,607,414 |
| வங்கி மேலதிக பற்று | 20 | 350,871,279 | 105,939,957 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **2,246,376,578** | **2,885,147,370** |
| **மொத்த உரிமை முதல் மற்றும் பொறுப்புக்கள்** | | **8,576,237,152** | **4,845,827,423** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் விளக்கக் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்குகின்றன.
(அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களை குறிக்கின்றன.)
இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைவாக்கமுடையது.

.........................................................
நிதி பிரதிப் பொது முகாமையாளர்

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்புதற்கும் முன்வைப்பதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும்.
இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்காகவும் பணிப்பாளர் சபை சார்பாகவும் ஒப்பமிடப்பட்டது.

.........................................................
தலைவர்

.........................................................
பணிப்பாளர்

திகத 24.06.2024.

# உரிமை முதலின் மாற்றங்கள் பற்றிய கூற்று

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக

| | அறிவிக்கப்பட்ட மூலதனம் ரூ.ச | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூ.ச | பொது ஒதுக்கங்கள் ரூ.ச | ஏனைய ஒதுக்கங்கள் ரூ.ச | தடுத்துவைக்கப்பட்ட இலாபம்.'.நட்டம் ரூ.ச | மொத்தம் ரூ.ச |
|---|---|---|---|---|---|---|
| 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியில் நிலுவை | 100,000,000 | 241,108,234 | 45,607,646 | (27,220,257) | 771,724,662 | 1,131,220,285 |
| வருடத்திற்கான தேறிய இலாபம் / (நட்டம்) | - | - | - | | 535,764,789 | 535,764,789 |
| இளைப்பாறல் பயன் கடப்பாட்டின் மீதான நிகர ஆயுட்கால இலாபம்/ (நட்டம்) மற்றும் வரியின் நிகரம் | - | - | - | (2,989,756) | - | (2,989,756) |
| கடந்த ஆண்டுக்கான சீராக்கல்கள் | | | | | 4,551,548 | 4,551,548 |
| ஆண்டின் போதான மீள்மதிப்பீடு | | 113,699,964 | | | | 113,699,964 |
| **31 மார்ச் 2023 ஆம் திகதியில் நிலுவை** | **100,000,000** | **354,808,198** | **45,607,646** | **(30,210,013)** | **1,312,041,000** | **1,782,246,831** |
| | | | | | | |
| **2023 ஏப்ரல் 01 ஆம் திகதியில் நிலுவை** | **100,000,000** | **354,808,198** | **45,607,646** | **(30,210,013)** | **1,312,041,000** | **1,782,246,831** |
| வருடத்திற்கான தேறிய இலாபம் (நட்டம்) | - | - | - | - | 966,168,654 | 966,168,654 |
| இளைப்பாறல் பயன் கடப்பாடுகள் மீதான ஆயுட்காலம் இலாபம் /(நட்டம்) மற்றும் வரிகுறைக்கப்பட்ட பின்னர் எஞ்சியதொகை | - | - | - | (2,965,152) | - | (2,965,152) |
| கடந்த ஆண்டுக்கான சீராக்கல | - | - | - | - | (809,314) | (809,314) |
| ஆண்டின் போதானமீள்மதிப்பீடு | - | 3,615,021,486 | - | - | - | 3,615,021,486 |
| பங்கிலாப செலுத்தல்கள் - முந்தைய ஆண்டுகள் | | - | - | - | (87,500,000) | (87,500,000) |
| பங்கிலாப செலுத்தல்கள் - நடப்பு ஆண்டு | | | | | (102,500,000) | (102,500,000) |
| **2024 மார்ச் 31 ஆம் திகதியில் நிலுவை** | **100,000,000** | **3,969,829,684** | **45,607,646** | **(33,175,165)** | **2,087,400,340** | **6,169,662,505** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் விளக்கக் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்குகின்றன.
(அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன)

# நிதிப் பாய்ச்சல் கூற்று

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக

| | 2023/2024<br>ரூ.ச | 2022/2023<br>ரூ.ச |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் மூலமான நிதிப் பாய்ச்சல்** | | |
| வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம் | 1,501,214,947 | 735,435,943 |
| **சீராக்கல்கள்** | | |
| தேய்மானம் / மதிப்பிறக்கம் | 71,820,585 | 47,682,310 |
| வட்டி வருமானம் | (272,189,109) | (370,461,238) |
| அரசாங்க மானியங்கள் பிற்போடப்பட்ட வருமானம் | (24,437,682) | - |
| நம்பிக்கைப் பொறுப்பு கடன் மற்றும் மேலதிகப்பற்று வட்டி | 66,830,005 | 22,797,696 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் விற்பனையின் இலாபம் / நட்டம் | - | (2,352,197) |
| கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகள் | 1,482,000 | 1,326,000 |
| பதிவழிக்கப்பட்ட இருப்புக்களும் கடனும் | 503,478 | - |
| கடனாளிகளின் குறைபாள | 68,461,383 | 105,281,937 |
| பங்குகளின் குறைபாடு | (13,893,794) | (17,209,276) |
| இளைப்பாறல் நன்மை கடப்பாடுகளுக்கான ஒதுக்கீடுகள் | 11,918,676 | 6,623,591 |
| கடந்த ஆண்டுக்கான சீராக்கல்கள் | (809,314) | 4,551,548 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **1,410,901,176** | **533,676,315** |
| இருப்புப் பொருட்கள் (அதிகரிப்பு / குறைவடைதல்) | 391,391,002 | 47,986,935 |
| வர்த்தக கடனாளிகள் (அதிகரிப்பு / குறைவடைதல்) | (984,598,930) | 214,966,603 |
| அரசாங்க மானிய பிற்போற்றப்பட்ட (அதிகரிப்பு / குறைவு) | (24,437,682) | (1,205,100) |
| பெறத்தக்க இறக்குமதி செய்யப்பட்ட அரிசிவிலை மானியம் (அதிகரிப்பு)/குறைப்பு | - | 1,209,838,823 |
| இலகு செலுத்தல் கடன் முறையின் (அதிகரிப்பு / குறைவு) | - | 7,445 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்படவைகளின் (அதிகரிப்பு / குறைவு) | (1,871,473,562) | (1,852,085,415) |
| **தொழிற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட பணம்** | **(1,078,217,996)** | **153,185,605** |
| செலுத்தப்பட்ட பிடித்து வைத்தல் வரி | (18,196,251) | (1,655,756) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (272,724,531) | (43,182,162) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (7,997,040) | (15,815,878) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய தொகை** | **(1,377,135,818)** | **92,531,809** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய பணம்** | | |
| ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுதல் | (12,326,955) | (3,176,535) |
| செயல்பாட்டில் உள்ளவேலையில் முதலீடு | - | (34,766,180) |
| விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்ற பணம் | - | 100,000 |
| குறுகியகால முதலீடுகளிலிருந்து கிடைக்கப்பட்ட வட்டி | 363,925,785 | 153,458,665 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய பணம்** | **351,598,830** | **115,615,950** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய நிதி** | | |
| நிலையான வைப்புக்களில் முதலீடுகள் | 310,391,050 | (1,042,134,841) |
| குறுகிய கால - கட்டியெழுப்பப்பட்ட ஆதாய அளவு - மக்கள் வங்கி | 6,578,561 | 339,009,420 |
| குறுகிய கால - கட்டியெழுப்பப்பட்ட ஆதாய அளவு - தே.அ.வங்கி | (1,880,745) | 1,241,811 |
| தேறிய கடன் மீள் செலுத்தல்கள் மற்றும் வருமானம் | 778,039,266 | 13,600,000 |
| செலுத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புக் கடன் / மேலதிக பற்று வட்டி | (66,830,005) | (22,797,696) |
| செலுத்தப்பட்ட ஈவுத்தொகை | (190,000,000) | - |
| **நிதித் தொழிற்பாடுகளிலிருந்து தேறிய நிதி** | **836,298,128** | **(711,081,307)** |
| காசும் காசுக்குச் சமமானவைகளுக்குமான தேறிய அதிகரிப்பு / குறைவு | (189,238,861) | (502,933,548) |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் | (92,465,605) | 410,467,943 |
| **வருட இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - அ)** | **(281,704,465)** | **(92,465,605)** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் விளக்கக் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்குகின்றன.
(அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன)

குறிப்பு - அ - காசும் காசுக்குச் சமமானவைகளுக்குமான பகுப்பாய்வு

| | 31.03.2024 திகதியில் ரூ.ச | 31.03.2023 திகதியில் ரூ.ச |
|---|---|---|
| **வங்கியிலுள்ள பணத்தொகை** | | |
| இலங்கை வங்கி (கணக்கிலக்கம் 8859546) | 270,158 | 270,158 |
| சம்பத் வங்கி (கணக்கிலக்கம 000930000337) | 1,218,404 | 1,354,218 |
| சம்பத் வங்கி - DFS (கணக்கிலக்கம் 002930006974) | 508,313 | - |
| இலங்கை வங்கி (கணக்கிலக்கம 1060) | 681,790 | 93,358 |
| மக்கள் வங்கி - குருநாகல் | 1,011,200 | 1,015,315 |
| மக்கள் வங்கி - மாத்தறை | 2,425,851 | 1,006,750 |
| மக்கள் வங்கி - கண்டி | 1,824,267 | 1,312,850 |
| மக்கள் வங்கி - கல்முனை | 3,110,331 | 1,000,000 |
| தே.அ.வ (க/இ - 101000160408) | 235,845 | 478,506 |
| மக்கள் வங்கி - அரிசி 180 | 377,929 | 614,901 |
| மக்கள் வங்கி - அரிசி 004 1 0027 0206579 | 51,951 | 81,951 |
| தேசிய சேமிப்பு வங்கி | 26,204 | 25,474 |
| **கையிருப்புப் பணம்** | | |
| சிற்றலறை செலவுல் பணம் | 643,586 | 873,019 |
| கையிருப்புத் தொகை | 56,780,985 | 5,216,191 |
| **வங்கி மேலதிக பறறு** | | |
| சம்பத் வங்கி - DFS (கணக்கிலக்கம் 002930006974) | - | 131,660 |
| மக்கள் வங்கி - (கணக்கிலக்கம் - 004100120210918) | (350,871,279) | (105,939,957) |
| | **(281,704,465)** | **(92,465,605)** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் விளக்கக் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்குகின்றன.
(அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன)

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 2023/2024

## 1. பொதுவான தகவல்கள்

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனமானது ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனியாகும் என்பதோடு கூட்டிணைக்கப்பட்ட இக்கம்பனி இலங்கையில் அமைந்துள்ளது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக இலக்கம் 100, நவம் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது.

கம்பெனியானது அடிப்படையில் ஒரு வணிக வியாபாரத்தை நடத்துவதில் ஈடுபட்டுள்ளதோடு அரசாங்க நிறுவனங்களுக்கான பெறுகை முகவராகவும் உள்ளது.

2024 மார்ச் 31 ஆம் திகதியில் கம்பெனியின் பணியாளர்கள் எண்ணிக்கை 300 ஆகும். (2022/23 - 336)

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 தயாரிப்புக்கான அடிப்படை

#### 2.1.1 இணக்கக் கூற்று

இக்கணக்குக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) வகுக்கப்பட்டுள்ள புதிய இலங்கை கணக்கீட்டு நியமனங்களின் (SLFRS/LKAS) பிரகாரமும் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரமும் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.2 அளவீட்டின் அடிப்படை

நிதி நிலை அறிக்கையிலுள்ள பின்வரும் பொருண்மையான உருப்படிகளைத் தவிர வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன:

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19 இல் குறிப்பிடப்பெற்ற எதிர்வுகூறப்பட்ட அலகுவரைமு-றையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடுகள் அதன் தற்போதைய மதிப்பில் அளவிடப்படுகின்றன.

எதிர்நோக்கக்கூடிய எதிர்காலத்தில் கம்பனியின் தொடர்ந்து இயங்குவதற்கான ஆற்றல் தொடர்பாக பணிப்பாளர்கள் மதிப்பீடு செய்துள்ளதோடு வர்த்தகத்தை கலைத்தல் அல்லது நிறுத்துவதற்கான தேவையை அவர்கள் முன்கூட்டியே எதிர்பார்க்கவில்லை.

#### 2.1.3 ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

நடப்பு ஆண்டுக்கான சமர்ப்பணத்திற்கு இணங்க தேவையான போதெல்லாம் முந்தைய ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள் மற்றும் சொற்றொடர்கள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

#### 2.1.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பயன்பாடு

எஸ்.எல்.எ.்ப்.ஆர்.எஸ்/எல்.கே.ஏ.எஸ் (SLFRS/LKAS) களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கை-ளத் தயாரித்தல், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடப்பட்ட சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அளவுகள் பயன்படுத்தப்படுதல் மீது தாக்கம் ஏற்படுத்தும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பவற்றை மேற்கொள்ள முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. பயன்படுத்தப்பட்ட இந்த மதிப்பீடுகளிலிருந்து உண்மையான முடிவுகள் வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமா-னங்கள் இடையறாத அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் ஆனவை மதிப்பீடுகள் திருத்தப்பட்ட காலத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, தாக்கம் ஏற்படுத்தும் பட்சத்தில் எதிர்காலப் பகுதிகளுக்காகவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ள தொகைகளின் மீது மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தும்போது குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் மதிப்பீடுகள், நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் முடிவுகள் பற்றிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

குறிப்பு 16 - இளையாறல் பயன் கடப்பாடுகள்

இந்த நதிக் கூற்றுக்களைப் பரதிக்கும் பணவீக்க காரணிகளுக்காக எந்தச் சீராக்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

பொருத்தமான தனித்துவமான கொள்கைகள் அடுத்துவரும் குறிப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

#### 2.1.5 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

(அ) கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள உருப்படிகள் கம்பனி செயல்படும் ஆரம்பப் பொருளாதார சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகி-ன்றன (தொழிற்பாட்டு நாணயம்). இந்த நிதிக் கூற்றுக்கள் கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பண நாணயமாகிய இலங்கை ரூபாயில் (எல்.கே.ஆர்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்
வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல்களின் திகதியில் நிலவும் நாணய மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி தொழிற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பதன் மூலமும் வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆண்டு இறுதியில் நாணய பரிமாற்ற வீதங்களுக்கு மாற்றப்படுவதன் மூலமும் ஏற்படும் அந்நியச் செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான நிலுவைகள் ஆண்டு இறுதியில் காணப்படுகின்ற நாணய மாற்று விகிதத்தில் மாற்றப்படும்.

### 2.2 சொத்துக்களும் அவற்றுக்கான மதிப்பீட்டின் அடிப்படைகளும்

#### 2.2.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

#### 2.2.2 இனங்காணல் மற்றும் அளவீடு

ஒரு உருப்படிக்கான கிரயமானது அதன் கொள்முதல் விலை மற்றும் அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டிற்காக சொத்தை பணி நிலைக்கு கொண்டு வருவதற்கான நேரடியாக சுமத்தக்கூடிய எந்தவொரு கிரயத்தையும் உள்ளடக்கும். தம்மால் நிர்மாணிக்கப்பட்ட சொத்துகளின் கிரயமானது, பொருட்களின் விலை, நேரடி உழைப்பு மற்றும் சொத்தை அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டிற்கான பணி நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பட்டதான நேரடியாக சுமத்தக்கூடிய எந்தவொரு கிரயத்தையும் உள்ளடக்கும். பொருட்களின் பகுதிகளைக் கழற்றுவதற்கும் அகற்றுவதற்கும் மற்றும் அவை அமைந்துள்ள தளத்தை மீட்டமைப்பதற்கும் மற்றும் தகைமைபெறும் சொத்துகளுக்கான கடன்படு கிரயங்கள் இதில் அடங்கும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகள் வெவ்வேறு பயனுள்ள ஆயுட் காலங்களைக் கொண்டிருக்கும் போது, அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தனித்தனி உருப்படிகளாக (பிரதான கூறுகளாக) கணக்குப் பதியப்படுகின்றன.

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்களானவை முன்கொண்டு செல்லும் தொகையை மீட்டெடுக்க முடியாது என்பதைக் குறிக்கும் போதெல்லாம், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு செல்லும் தொகை சேத இழப்பிற்காக மதிப்பாய்வு செய்யப்படும். சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடக்கூடிய தொகையை விட அதிகமாக இருக்கமாயின், சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகை உடனடியாக அதன் மீட்கக்கூடிய தொகைக்கு குறைத்துக் காட்டப்படும்.

காணியும் கட்டடங்களும் 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் அடிப்பை-டயில் கணக்கிடப்பட்டுள்ளன.

முன்கொண்டு செல்லும் தொகையில் ஏதேனும் அதிகரிப்பு மற்ற விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு, சொத்து மீள்மதிப்பீட்டு கையிருப்பில் உரிமையாண்மையில் திரட்டப்படுகிறது. அதே சொத்தின் முந்தைய அதிகரிப்புகளை ஈடுசெய்யும் குறைவுகள் உரிமையா-ண்மையின் மீள்மதிப்பீட்டு இருப்புக்கு எதிராக விதிக்கப்படும். காணி மற்றும் கட்டிடங்கள், சீர்மதிப்புப் பெறுமதியில் இருந்து கட்டிடங்கள் மீதான திரட்டிய தேய்மானம் மற்றும் மீள்மதிப்பீடு தேதிக்குப் பின்னர் விதிக்கப்பட்ட சேத இழப்பு கழிக்கப்பட்டு அளவிடப்படும்.

திரட்டிய தேய்மானம் மற்றும் ஏதேனும் திரட்டிய சேத இழப்பு என்பவற்றை கிரயத்தில் கழித்து அல்லது தேவைப்படும்

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 2023/2024

போது மீள்மதிப்பீட்டில் பொறி மற்றும் உபகரணங்கள் குறிப்பிடப்படும். மீள்மதிப்பீடு 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு பெறும-திகள் அதன்படி குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2.3 பிற்காலக் கிரயங்கள்

ஒரு உருப்படியில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்குப் பாயுமாயின் மற்றும் அதன் செலவை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியுமாயின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மாற்றீடு செய்வதற்கான செலவு பொருளின் முன்கொண்டு செல்லும் தொகையில் இனங்காணப்படும். மாற்றீடு செய்யப்பட்ட பகுதியின் முன்கொண்டு செல்லும் தொகை அகற்றப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அன்றாட சேவைக்கான செலவுகள் அவை மேற்கொள்ளப்படும்போது இலாபம் அல்லது நட்டங்களில் இனங்காணப்படும்.

### 2.2.4 ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படுதல்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியின் முன்கொண்டு செல்லும் தொகை விற்றகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது கணக்குக் கூற்றுக்களி-லிருந்து விலக்கப்படும். அகற்றப்படும்போது ஏற்படுகின்ற இலாபம் அல்லது இழப்பில் பிற வருமானத்திற்குள் அடையாளம் காணல் மீதான இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏனைய இலாபம் அல்லது நட்டங்களில் ஏற்றுக்கொள்ள-ப்படும்.

### 2.2.5 தேய்மானம்

தேய்மானம் என்பது ஒரு சொத்தின் ஈற்றுப் பெறுமதியைக் கழித்து சொத்தின் கிரயம் அல்லது மாற்றீடு செய்யப்படும் பிற தொகையான தேய்மானம் செய்யக்கூடிய பெறுமதி மீது கணக்கிடப்படுகின்றது.

சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாங்கினை மிக நெருக்கமாக பிரதிபலிப்பதனால், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு பகுதியினதும்.

மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பூராக நேர் கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் தேய்மானம் இனங்காணப்படுகின்ற-து. குத்தகை காலத்தின் இறுதிக்குள் நிறுவனம் உரிமையைப் பெறும் என்பது நியாயமான முறையில் உறுதியாகத் தெரியாவிட்டால், குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் குத்தகை காலத்தில் அல்லது அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் என்பவற்றில் மிகவும் குறைந்த காலத்தில் தேய்மானம் செய்யப்படும். நிலம் தேய்மானம் செய்யப்படமாட்டாது.

தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்க-ளுக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மான விகிதங்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| கட்டிடம் | 7.5% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| உபகரணங்கள் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 10% |
| கணினிகள் | 33.33% |
| ஷோரூம் உபகரணங்கள் | 20% |
| குத்தகை கட்டிடம் | குத்தகை காலப்பகுதி அல்லது கட்டிடங்கள் தேய்மானம் செய்யப்ப-டக்கூடிய காலப்பகுதி ஆகிய இரண்டில் மிகவும் குறைவானது. |

தேய்மான முறை, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் ஈற்றுப் பெறுமதிகள் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு பொருத்தமானதாக இருக்கும் பட்சத்தில் சீர்செய்யப்படும்.

### 2.2.6 அருவச் சொத்துக்கள்

கணினி மென்பொருள் முறைமை 2022/2023 ஆம் ஆண்டின் இறுதியில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. மென்பொருள் முறைமையின் பயனுள்ள எதிர்கால ஆயுட் காலப்பகுதி 3 ஆண்டுகள் எனமதிப்பிடப்பட்டுள்ளது. பயனுள்ள ஆயுட்காலத்தின் அடிப்படையில் தேய்மானவிகிதம் பின்வருமாறு நிர்ண-யிக்கப்பட்டுள்ளது.

கணினி மென்பொருள் 33.33%

### 2.2.7 நிதிச் சொத்துக்கள் - வகைபடுத்தப்படுதல்

நிறுவனம் அதன் நிதிச் சொத்துக்களை பின்வரும் வகைகளில் வகைப்படுத்துகின்றது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி, கடன்கள் மற்றும் கிடைக்கப்பட வேண்டியவை, விற்பனைக்காகவுள்ள மற்றும் முதிர்ச்சியடையும் வரை தடுத்துவைக்கப்பட்ட-ள்ளவை. இந்த வகைப்படுத்தலானது நிதிச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட பணியின் மீது அடிப்படையாக அமைந்துள்ளது. ஆரம்ப இனங்காணலின்போது அதன் நிதி சொத்துக்களின் வகைப்படுத்தலை முகாமைத்-துவம் தீர்மானிக்கின்றது. அறிக்கையிடல் காலத்திலும், அறிக்கையிடல் திகதியிலும் இலாபம் அல்லது நட்டம் மூலமாக அல்லது விற்பனைக்கு உள்ளதாக அல்லது முதிர்ச்சியடையும் வரை தடுத்துவைத்திருப்ப-தாக நிறுவனம் நிதிச் சொத்துக்களை சீர்மதிப்புப் பெறுமதிக்கு வகைப்படுத்தவில்லை அனைத்து நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் கிரயத்தில் இனங்காணப்படும்.

### 2.2.8 கடன்கள் மற்றும் கிடைக்கப்பட வேண்டியவைகள்

கடன்கள் மற்றும் கிடைக்கப்பட வேண்டியவைகள் செயல்முனைப்பான சந்தையில் விலைக் கணக்குகள் முன்வைக்கப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய செலுத்தல்களுடனான இரண்டாம் நிலை அல்லாத நிதிச் சொத்துகள் ஆகும். அறிக்கையிடல் காலம் முடிவடைந்து 12 மாதங்களுக்குப் பின்னர் கால முதிர்வுகளைக் டுத்தப்பட்ட கிரயத்தில் காட்டப்படும்.

கொண்டவற்றைத் தவிர, அவை நடைமுறைச் சொத்துகளில் உள்ளடக்கப்படும். இவை நடைமுறையல்லாத சொத்துகளாக வகைபடுத்தப்படும். நிறுவனத்தின் கடன்கள் மற்றும் கிடைக்கப்பட வேண்டியவைகள் நிதிக் கூற்றுக்களில் உள்ள "வர்த்தக மற்றும் பிற கிடைக்கப்பட வேண்டியவை" மற்றும் "காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்" ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளன. 12 மாதங்களுக்குள் தீர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் பட்சத்தில் இத் தொகுதியில் உள்ள சொத்துக்கள் நடைமுறைச் சொத்துகளாக வகைப்படு-த்தப்படுவதுடன் இல்லையெனில், அவை நடைமுறையல் லாதவைகளாக வகைப்ப-டுத்தப்படும்.

"கடன்கள் மற்றும் கிடைக்கப்பட வேண்டி-யவைகள்" பின்னர் விளைவு வட்டி முறையைப் பயன்படுத்தி காலத் தேய்-மானப்படும்

### 2.2.9 நிதிச் சாதனங்கள் எதிரீடு செய்யப்படுதல்

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்காக சட்டப்பூர்வமாக நடைமுறை-ப்படுத்தக்கூடிய உரிமை உள்ளபோது நிகர அடிப்படையில் செலுத்துவதற்கு நோக்கம் இருக்குமாயின் அல்லது சொத்தை விற்பனைசெய்து ஒரே நேரத்தில் பொறுப்பு தீர்க்கப்படுமாயின் நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் எதிரீடு செய்யப்பட்டு, நிகர தொகை நிதி நிலை அறிக்கையில் அறிக்கையிடப்படும்.

### 2.2.10 நிதிச் சொத்துக்களுக்கான சேத இழப்பு

காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் கொண்டு செல்லப்படும் சொத்துக்கள்

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் ஒரு நிதிச் சொத்து அல்லது நிதி சொத்துக்களின் தொகுதி சேதமடைந்துள்ள-து என்பதற்கு புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதை நிறுவனம் மதிப்பிடுகின்றது. ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் தொகுதி சேதமடைந்து, சேத இழப்புக்களை ஏற்க நேரிடுவது சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் (ஒரு "இழப்பு நிகழ்வு") விளைவாக சேதம் ஏற்பட்டுள்ளதாக புறநிலை சான்றுகள் இருப்பின் மற்றும் அந்த இழப்பு நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துகளின் தொகுதியில் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் நம்பத்தகுந்த முறையில் மதிப்பிடக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தினால் மட்டுமேயாகும்.

சேத இழப்புக்கான சான்றுகளில் கடனாளிகள் அல்லது கடனாளர்களின் குழு குறிப்பிடத்தக்க நிதிச் சிக்கல்களை எதிர்கொள்கின்றன என்பதற்கான அறிகுறிகள், அவர்கள் திவால்நிலை அல்-லது பிற நிதி மறுசீரமைப்பிற்குள் நுழைவதற்கான நிகழ்தகவு உள்ளடங்குவதுடன் புறக்கணிப்புகளுடன் தொடர்புபடுத்தும் நிலுவைத் தொகைகள்

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 2023/2024

அல்லது பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் அளவிடக்கூடிய குறைவு இருப்பதை காணக்கூடிய தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. கடன்கள் மற்றும் கிடைக்கப்பட வேண்டியவைகள் வகையைப் பொறுத்தவரை, இழப்பின் அளவு சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகை மற்றும் நிதிச் சொத்தின் ஆரம்ப விளைவு வட்டி விகிதத்தில் கழிமானம் செய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய மதிப்பு (மேற்கொள்ள நேரிடாதுள்ள எதிர்கால கடன் நட்டங்களைத் தவிர்த்து) ஆகியவற்றுக்கு இடையேயான வித்தியாசமாக அளவிட -ப்படுகின்றது.

சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகை குறைக்கப்பட்டு, இழப்பின் அளவு வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

அடுத்துவரும் காலகட்டத்தில், சேத இழப்பு நட்டம் குறைந்து, அக்குறைவானது சேத இழப்பு ஏற்பிசைவு செய்யப்பட்ட பின்னர் இடம்பெற்ற ஒரு நிகழ்வுக்கு புறநிலையாக தொடர்புடையதாக இருந்தால் (கடனாளியின் நாணயநிலை மதிப்பீட்டில் முன்னேற்றம் போன்றவை), முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டத்தின் புறமாற்றம் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.2.11 நிதியல்லாச் சொத்துக்களுக்கான சேத இழப்பு

கால வரையறையற்ற பயனுள்ள ஆயுட் காலத்தைக் கொண்ட சொத்துக்கள் காலத் தேய்மானத்திற்கு உட்படமாட்டாதென்பதோடு அவை ஆண்டுதோறும் சோதிக்கப்படுகின்றன. நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள், முன்கொண்டு செல்லும் தொகையை மீட்டெடுக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டுமானால் காலத் தேய்மானத்திற்கு உட்பட்ட சொத்துக்கள் சேத இழப்பிற்காக மதிப்பாய்வு செய்யப்படும். சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகை அதன் மீட்கக்கூடிய தொகையை மீறிய தொகைக்கு சேத இழப்பு ஏற்பிசைவு செய்யப்படும். அறவிடக்கூடிய தொகை

என்பது சொத்தின் விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்ட சீர் மதிப்புப் பெறுமதி மற்றும் பயன்பாட்டில் உள்ள பெறுமதி என்பவற்றில் கூடிய பெறுமதியாகும். சேத இழப்பை மதிப்பிடுவதற்கான நோக்கங்களுக்காக, தனித்தனியாக அடையாளங்காணக்கூடிய காசுப் பாய்ச்சல்களுடனான (பணப் பிறப்பாக்க அலகுகள்) மிகக் குறைந்த மட்டத்தில் சொத்துக்கள் தொகுக்கப்படுகின்றன.

### 2.2.12 சரக்குத் தொக்குகள்

(I) சரக்குத் தொக்குகள் கிரயம் அல்லது நிகர தேறத்தக்க மதிப்பில் குறைந்த பெறுமதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளன. நிறையேற்று சராசரி முறையின் மூலம் கிரயம் நிர்ணயிக்கப்படுகின் -றது. நிகர தேறத்தகு பெறுமதி என்பது சாதாரண வர்த்தக நடவடிக்கைகளின் விற்பனை விலையிலிருந்து பூர்த்தி செய்வதற் -கான கிரயம் மற்றும் விற்பனை செலவுகள் கழிக்கப்பட்டதன் பின்னரான பெறுமதியாகும். நிதி ஆண்டு இறுதிக்காக பௌதீக சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு சேதமடைந்த இருப்புப் பொருட்களை அடையாளங்கண்டு நிகர தேறத்தகு பெறுமதி கணக்குப் பதியப்பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்குமுன்னர் கொள்வனவு செய்யப்பட்ட இருப்புகள் மொத்தசெலவில் 5% சேத இழப்பு ஒதுக்கீட்டை வழங்கிய பின்னர் கணக்குகளுக்குஎடுக்கப்பட்டுள்ளன. சந்தைவிலைஅளவுகள் கிரயவிலையைவிட அதிகமாக இருப்பதால் ஒருவருடத்திற்குள் கொள்வனவுசெய்யப்பட்ட இருப்புகள் கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

(ii) வருடத்தில் இலாபம் மற்றும் நட்டங்களின் விற்பனைக் கிரயமாக இனங்காணப்பட்டுள்ள சரக்குகளின் அளவு ரூபா. 10,164,817,761 ஆகும்.

(iii) ஒரு வருடத்திற்கு மேலான இருப்புகளுக்கு 5% கூட்டுச் சேத இழப்பு மற்றும் தொக்குச் சரக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பெறுமதிகளையும் தேறச்செய்ய கம்பெனிக்கு முடியாதென்பதற்கான புறநிலை சான்றுகள் இருக்கும்போது முழுமையாக சேதமடைந்து -ள்ளதென்ற அடிப்படையில் இருப்பு சேத இழப்புக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(iv) பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்கள்

1. கொள்கைப் பிரகடனம்:
கடன் வசதிகளுக்காக பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிறுவனத்தின் நிதிப் பொறுப்புக்கள் மற்றும் அபாயங்கள் பற்றிய தெளிவை வழங்குவதற்காக பிணையாக வைக்கப்பட்ட சொத்துகளின் வகைகள், முன்கொண்டு செல்லும் தொகைகள் மற்றும் தொடர்புடைய கடன் வசதிகள் ஆகியவை குறிப்பிடப்பட்-டுள்ளன.

2. வெளிப்படுத்துதல்:

கடன் வசதிகளைப் பெறுவதற்காக பின்வரும் சொத்துக்கள் நிதி நிறுவனங்களுக்கு பிணையாக வைக்கப்பட்டுள்ளன:

a) **சரக்குத்தொக்கு**

| வங்கியின் பெயர் | அடமானத் தொகை (ரூ) |
|---|---|
| மக்கள் வங்கி | 220,490,000 |
| சம்பத் வங்கி | 197,000,000 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 471,470,007 |

b) (i) **நிலையான வைப்பு**

| வங்கியின் பெயர் | அடமானத் தொகை (ரூ) |
|---|---|
| மக்கள் வங்கி | 1,008,700,000 |

(ii) **பில்டப் மார்ஜின**

| வங்கியின் பெயர் | அடமானத் தொகை (ரூ) |
|---|---|
| மக்கள் வங்கி | 18,688,366 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 3,112,145 |

3. நிதி நிலை மீதான தாக்கம்:

இந்த சொத்துக்களை பிணையாக வைப்பது நிதிக் கூற்றுக்களில் அவற்றின் ஏற்பிசைவினை பாதிக்காது என்றபோதிலும் அது தொடர்புடைய பொறுப்புகள் தீர்க்கப்படும் வரை பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்களை அகற்றுவதற்கான நிறுவனத்தின் திறனைக் கட்டுப்படுத்துகிறது. அறிக்கையிடப்பட்ட தேதியின்படி இந்த பிணையாக வைக்கப்பட்ட சொத்துகளின் முன்கொண்டு செல்லும் தொகைகள் பின்வருமாறு அமைகின்றன:

சரக்குத் தொக்குகள் : 888,960,007.00 ரூபா
நிலையான வைப்புக்கள் : 1,008,700,000.00 ரூபா
பில்ட்-அப் மார்ஜின்: 21,800,511.00 ரூபா

### 2.2.13 வர்த்தக கிடைக்கவேண்டியவைகள்

நிதி அல்லது வேறு நிதிச் சொத்தினைப் பெறுவதற்கு ஒப்பந்த உரிமை கம்பனிக்கு உள்ளபோது மற்றும் உள்ளபோது மட்டும் தமது நிதி நிலை பற்றிய கூற்றில் கம்பனியானது நிதிச் சொத்துக்களை வர்த்தக கிடைக்கப்பட வேண்டியவைகளாக இனங்காணும்.

வர்த்தக கிடைக்கப்பட வேண்டியவைகள் என்பது சாதாரண வர்த்தக நடவடிக்கைகளின் போது விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பட வேண்டிய பணமாகும். ஒரு வருடம் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதியில் வசூல் எதிர்பார்க்கப்படுமானால் (அல்லது வியாபாரத்தின் சாதாரண தொழிற்பாட்டுச் சுழற்சியில்) அவை நடைமுறைச் சொத்துக் -ளாக வகைப்படுத்தப்படும். இல்லையெனில், அவை நடைமுறையல்லா சொத்துக்களாக முன்வைக்கப்படும்.

வர்த்தக கிடைக்கப்பட வேண்டியவைகள் எதிர்பார்க்கப்படும் தேறத்தகு பெறுமதியில் காட்டப்படுவதோடு ஆண்டு முடிவில் நிலுவையில் உள்ள அனைத்துத் தொகைக ளையும் மதிப்பாய்வு செய்வதன் அடிப்படையில் ஐயக் கிடைக்கப்பட வேண்டியவைகளுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்ப-டுகின்றன. அறவிட முடியாக் கடன்கள் அவை அடையாளம் காணப்பட்ட ஆண்டில் பதிவழிக்கப்படுகின்றன.

பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் வர்த்தக வருமதிகளின் சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடு நிறுவப்பட்டுள்ளது:

- 1 வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடனாளிகளுக்கு 5% கூட்டுக் சேத இழப்பீடு பயன்படுத்தப்படுகிறது.
- 5 வருடங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள கடனாளிகளுக்கு 100% முழு சேத இழப்பீடு பயன்படுத்தப்படுகிறது.

நிலுவைத் தொகைகள் மீள அறவிட்டுக் கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில், தொடர்புடைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏற்புடைய மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

### 2.2.14 முதலீடுகள்

(அ) நீண்ட கால முதலீடுகள்

நீண்ட கால அடிப்படையில் பிடித்துவைக்கப் -பட்ட முதலீடுகள் நடைமுறையல்லா முதலீடுகள் என வகைபடுத்தப்படுவதோடு கிரயத்தில் அளவிடப்படுகின்றன. முதலீட்டுக்

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 2023/2024

கிரயம் என்பது தரகு மற்றும் கொடுக்கல் வாங்கலின் கிரயம் உள்ளிட்ட கையகப்படுத் -துதல்களின் கிரயம் ஆகும்.

ஆ) குறுகிய கால முதலீடுகள்

குறுகிய கால முதலீடுகள் சந்தை மதிப்பில் இனங்காணப்படுகின்றன. எந்தவொரு இலாபம் மற்றும் நட்டமும் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**2.2.15 காசும் காசுக்குச் சம்மானவைகளும்**

காசும் காசுக்குச் சமமானவைகளும் கையி-லுள்ள பணம், கேள்வி வைப்பு மற்றும் குறுகிய கால அதிக திரவ முதலீடுகள் என வரைய-றுக்கப்படுகின்றன. காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசும் காசுக்குச் சமமானவை-வகளும் கையிலுள்ள பணம் மற்றும் வங்கி மேலதிகப் பற்றுகள் கழிக்கப்பட்டு வங்கியி-லுள்ள வைப்புகளைக் கொண்டமைந்திருக்கும்.

**2.2.16 கூறப்பட்ட மூலதனம்**

பங்கு வழங்குதலுக்குரியதாக கம்பனிக்குக் கிடைத்த அனைத்துத் தொகைகளும் கூறப்பட்ட மூலதனத்தில் அடங்கும்.

இந்த நிறுவனம் முழுமையாக இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமானது என்பதோடு நிதி அமைச்சு விடயப்பரப்புக்கின் கீழ் வருகின்றது.

**2.2.17 வர்த்தக செலுத்தப்பட வேண்டியவைகள்**

நிதி அல்லது வேறு நிதிச் சொத்தினைச் செலுத்துவதற்கு ஒப்பந்த உரிமை கம்பனிக்கு உள்ளபோது மற்றும் உள்ளபோது மட்டும் தமது நிதி நிலை பற்றிய கூற்றில் கம்பனியானது நிதிப் பொறுப்புக்களை வர்த்தக செலுத்தப்பட வேண்டியவைகளாக இனங்காணும்.

வர்த்தக செலுத்தப்பட வேண்டியவைகள் என்பது சாதாரண வர்த்தக நடவடிக்கைகளின்போது வழங்குனர்களிடமிருந்து பெறப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்காக செலுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடுகளாகும். செலுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியது ஒரு வருடம் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதியில் எனின் (அல்லது அதனைவிட காலம் அதிகமாக இருப்பின் வியாபாரத்தின் சாதாரண தொழிற்பாட்டு சுழற்சியில்) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் நடைமுறைப் பொறுப்புக்களாகவும் அதனைவிட கூடிய காலம் எனின் நடைமுறையல்லா பொறுப்புக்களாகவும் வகைபடுத்தப்படும்.

வர்த்தக செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**2.2.18 கடன் வாங்கல்**

மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயம் கழிக்கப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதியில் ஆரம்பத்தில் கடன் வாங்கல் இனங்காணப்படுகி -ன்றது. கடன் வாங்கல் பிற்காலத்தில் காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் காட்டப்படுவ

-தோடு வரவுத் தொகை (கொடுக்கல் வாங்கல் கிரயம் கழிக்கப்பட்டு) மற்றும் மீட்புப் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வித்தியாசம் விளைவு வட்டி முறையைப் பயன்படுத்தி கடன் வாங்கிய காலப்பகுதியில் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**2.2.19 அரசாங்க மானியங்களுக்கான கணக்கீடு**

அரசாங்க மானிய நடவடிக்கைகளுக்கான கணக்கீடு இ.க.த.நி 20 இன் படி செய்யப்பட் டுள்ளதுடன் கணக்குகளுக்கான குறிப்பு 21 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**2.2.20 வருமான வரி**

(அ) நடப்பு வரிகள்

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதற்கான திருத்தங்களின்படி ஆண்டின் தொழிற்பாட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் வருமான வரிக்கான ஏற்பாடுகள் அமைந்துள்ளன.

(ஆ) பிற்போடப்பட்ட வரி விதிப்பு

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைகள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் முன்கொண்டு செல்லும் பெறுமதி ஆகியவற்றுக்கு இடையேயான அறிக்கையிடல் தேதியில் உள்ள அனைத்து தற்காலிக வேறுபாடுகளின் மீது பொறுப்பு முறையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரிவிதிப்பு வழங்கப்படுகிறது.

கழிக்கக்கூடிய அனைத்து தற்காலிக வேறுபாடுகளுக்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் முன்கொண்டு செல்லப்பட்ட பயன்படுத்தப்படா-த வரி இழப்புகள் மற்றும் வரிக் கழிவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் / வரிக் கழிவுகளுக்காக வரி அறவிடக்கூடிய இலாபம் காணப்படுவதற்கு வாய்ப்புள்ள அளவிற்கு ஏற்பிசைவு செய்யப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளின் முன்கொ-ண்டு செல்லும் பெறுமதி ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியிலும் மதிப்பாய்வு செய்யப்படுவதோடு தொடர்புடைய வரி நன்மை -மகள் தேறுவதற்கு இனி சாத்தியமில்லை என்ற அளவிற்கு குறைக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அளவிடப்படுவது விதிக்கப்பட்டுள்ள அல்லது நிதி நிலைமை பற்றிய ஒரு கூற்று அறிக்கையிடல் தினத்தில் விதிக்கப்பட்டுள்ள வரி விகிதங்கள் (மற்றும் வரிச் சட்டங்கள்) மீது சொத்துக்கள் தேறப்பட்ட அல்லது பொறுப்பு தீர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த வருடத்திற்கு ஏற்புடையதாக அமைந்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வரி விகிதங்களுக்காகும்.

நடப்பு வரிப் பொறுப்புகளுக்கு எதிராக நடப்பு வரி சொத்துக்களை எதிரீடு செய்வதற்கு

சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருக்குமாயின் மற்றும் அதே வரி விதிக்கப்படக்கூடிய நிறுவனம் மற்றும் அதே வரிவிதிப்பு அதிகார சபையுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வரிகள் இருக்கும்போது பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் எதிரீடு செய்யப்படும்.

கடந்த காலங்களில் வரி இழப்புகளை முன்னெடுத்துச் சென்றதன் காரணமாக பிற்போடப்பட்ட வரி சொத்து கணக்கு எழுந்துள்ளது. வரி இழப்புகளை மீட்டெடுப் -பது சாதாரண கால வரையறைகளுக்கு அப்பால் செல்வதால் இந்த சொத்து கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. இருப்பினும் இது குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) புரள்வு அடிப்படையிலான வரிகள்

புறள்வு அடிப்படையிலான வரியில் பெறும தி சேர்க் கப்பட்ட வரி (VAT) மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) ஆகியவை அடங்கும்.

**2.2.21 வேலைவாய்ப்புக்குப் பின்னரான நன்மைகள்**

(அ) வரையறுக்கப்பட்ட நலத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட நலத் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தைத் தவிர்ந்த வேலைவாய்ப்புக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நிதிக் கூற்றில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பொறுப்பாக அமைவது அறிக்கையிடல் திகதியில் வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாட்டின் எதிர்காலப் பெறுமதியாகும்.

வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாட்டின் எந்தவொரு இலாபம் அல்லது நட்டமும் அவை எழும் காலகட்டத்தில் விரிவான வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும்.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் பிரகாரம் ஒரு கம்பனியில் இடையறாது ஐந்து வருடகால சேவையைப் பூர்த்தி செய்திருப்பின் மட்டும் ஊழியர்களுக்கு பணிக்கொடை செலுத்துவதற்கான பொறுப்பு ஏற்படும்.

இலங்கை கணக்கீட்டு தரநியமம் 19 இல் பரிந்துரைக்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட அலகுவரை முறை; ஆண்டிற்கான பற்றாக்-குறை அல்லது கட்டணத்தை அடையாளம் காண்பதற்கு பணியாளர் நன்மைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் குறிப்பு இலக்கம் 16 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

